# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# Annual Report

# 2014

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை

# 2014

**1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழுச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பூ ர்த்தி செய்யப்படுவதற்காக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
தலைமை அலுவலகம்
இல.165, கின்சி வீதி, கொழும்பு-08.

(94) 011 2694925, 2685980, 2685981, 2685339
மின்னஞ்சல் : sechrc@sltnet.lk
இணையத்தளம் : www.hrcsl.lk

**உள்ளடக்ம்** **பக்கம்**


| | |
|---|---|
| தொலைநோக்கு பணிக்கூற்று மற்றும் இலச்சினை | ii |
| உள்ளடக்கம் | iii |
| ஆணைக்குழுவின் அமைப்பு | v |
| தவிசாளரின் செய்தி | vi |
| அறிமுகம் | vii |
| **அத்தியாயம் 01** | |
| மனித உரிமைகளைப் பாதுகாத்தல் | 1 |
| 1.1 முறைப்பாடுகளைக் கையாளுதல் | 1 |
| 1.2 கலந்தாலோசனைச் சேவை | 2 |
| 1.3 அவசர அழைப்புச் சேவை | 2 |
| 1.4 முறைப்பாடுகளை வகைப்படுத்தல் | 2 |
| 1.5 முறைப்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரல் | 4 |
| 1.6 வழங்கப்பட்ட சிபார்சுகளின் அமுல்படுத்தல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் | 5 |
| 1.7 தெரிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் | 5 |
| **அத்தியாயம் 02** | |
| மனித உரிமைகளை மேம்படுத்தல் | 7 |
| 2.1 அறிமுகம் | 7 |
| 2.2 மனித உரிமைகள் மீதான கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 7 |
| 2.3 மனித உரிமைகள் கல்விக்கான உரிமைகள் | 10 |
| 2.4 தொழிலாளர் உரிமைகள் மீதான விசேட கலந்துரையாடலும், சர்வதேச தொழில் உரிமைகள் கருவிகளின் பிரயோகத்தன்மைமைய மீள்பார்வை செய்தலும் (9மே 2014) | 11 |
| 2.5 மஉஆ கண்காட்சிக்கூடங்கள் | 11 |
| 2.6 சர்வதேச தினங்களை நினைவுகூருதல் | 11 |
| 2.6.1. சர்வதேச மகளிர்தினம் 2014 | 11 |
| 2.6.2 சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆதரவுக்கான சர்வதேச தினம் | 12 |
| 2.6.3 முதியோர் உரிமைகள் | 13 |
| 2.6.4 சர்வதேச மனித உரிமைகள் தினம் | 13 |
| 2.7 கையேடுகள் | 14 |
| 2.8 ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 |
| 2.9 உள்ளகப் பயிற்சிகள் | 14 |
| **அத்தியாயம் 03** | |
| மனித உரிமைகளைக் கண்காணித்தல் | 15 |
| 3.1 தேசிய மொழிக் கொள்கை | 16 |
| 3.2 தேர்தல் கண்காணிப்பு | 16 |
| 3.2.1. தவிசாளர் சபைத் தேர்தல்கள் | 16 |
| 3.2.2. ஜனாபதி தேர்தல்கள் 2015 | 16 |
| 3.3 பேருவளை மற்றும் அளுத்கமவில் மதப் பதற்றம் | 17 |
| 3.4 மரண தண்டனை மீதான அறிக்கையினை வெளியிடுதல் | 17 |
| 3.5 விஜயங்கள் | 17 |
| 3.6 தடுப்பு கட்டளையினை பதிவு செய்தல் | 18 |

3.7 மஉஆ கண்காணிப்பாளர்கள் மற்றும் மீளிணக்க செயன்முறைக்கு
ஆதரவளித்தல் 19

## அத்தியாயம் 04

மனித வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவம் 21

4.1 மஉஆ பணியாளர்களுக்கான இயலுமை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 21

4.1.1 மனித உரிமைகள் மற்றும் ஊழல்களுக்கு இடையிலான தொடர்பு மீதான பயிற்சிப்பட்டறை 21

4.1.2 உள்ளூர் பயிற்சிகள் 21

4.1.3 மொழித்திறன்கள் 21

4.1.4 உயர்கல்வி 21

4.1.5 சர்வதேசப் பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள் 22

4.2 செல்வி. துஷித்தா சமரசேகர –பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் மீளாய்வு) 23

4.3 இமஉஆ ஆளணி 25

4.4 நிதிக்கூற்று ஆண்டு 2014 38

## அத்தியாயம் 05

இமஉஆ பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடுகள் 27

## அத்தியாயம் 06

தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான உறவு
31

## அத்தியாயம் 07

மனித உரிமைகளின் நிலை 2014 39

## தொலை நோக்கு

அனைவருக்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும் சட்டம் ஒழுங்கைப் ஊக்குவித்து பாதுகாப்பதுமே எமது தொலை நோக்காகும்.

## பணிக்கூற்று

சட்டம் கொள்கை மற்றும் பழக்கத்தில் அனைவருக்கும் மனித உரிமைகளை பாதுகாத்து ஊக்குவிப்பதன் ஊடாக இலங்கையில் ஒரு சிறந்த மனித உரிமைகள் கலாசாரத்தை விருத்தி செய்வதும், அனைவருக்கும் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதை நோக்கிப் பணியாற்றும் எல்லாப் பங்காண்மையாளர்களின் ஒத்துழைப்பு மற்றும் கூட்டுழைப்புடன் இலங்கை பிரசைகளுக்காக இலங்கை அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் மீதான விசேட வலியுறுத்தலுடன் உலக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள், நெறிகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைய சட்டம், கொள்கை, பழக்கம் என்பனவற்றில் எல்லோருக்குமான மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதன் ஊடாக இலங்கையில் ஒரு சிறந்த மனித உரிமை கலாச்சாரத்தை விருத்தி செய்வதே எமது பணிக்கூற்றாகும்.

## இலச்சினை

மனித உரிமைகளை சர்வதேச மற்றும் தேசிய மட்டங்களில் பாதுகாத்து ஊக்குவிப்பதற்கான தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் பொறுப்பினை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் இலச்சினையானது எடுத்துக்காட்டுகிறது. இரண்டு கைகளானவைபாதுகாத்தல் மற்றும் நடவடிக்கை எடுத்தலைப் பிரதிபலிக்கிறது, பூ கோளமானது பூ மியின் தூர உள்ள எல்லா மூலைகளிலும் மனித உரிமைகளைப் பரப்புவதையும் சர்வதேச மட்டத்தில் கிடைக்கச் செய்வதையும் பிரதிபலிக்கிறது. இலங்கை தேசப்படமானது தேசிய மட்டத்தில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அவசியத்தைப் பிரதிபலிக்கிறது. பெண், ஆண் சிறுபிள்ளையின் உருவமானது மனித உரிமைகளின் பாதுகாப்பானது சமமாக கிடைக்கப்பட வேண்டுமென்பதை பிரதிபலிப்பதுடன் அந்த நோக்கத்திற்காக ஒரு ஆக்கபூ ர்வமான சூழ்நிலை நிறுவப்பட வேண்டுமென்பதையும் பிரதிபலிக்கிறது. காட்டப்படும் குடும்ப உருவமானது குடும்ப இருப்பையும் நாகரீகத்தின் மிக அவசியமான பாகமாகவும், பிரதானமாகவும் அது நடத்தப்படுவதையும் காட்டுகிறது. பொதுவான மதிப்பீட்டில் மனித உரிமைகளின் தேசிய மட்டத்திலான பாதுகாப்பிற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட தியாகங்கள் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதை இலச்சினை காட்சிப்படுத்துகிறது.

## ஆணைக்குழுவின் அமைப்பு



தவிசாளர்

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஆர் பி பெரேரா

## ஆணையாளர்கள்

திருமதி ஜெசிமா இஸ்மயில்

திரு ரி. ஆர். ஆனந்தராசா

டாக்டர் பேர்ணாட் டி சொய்சா

கலாநிதி எஸ்.டபிள்யு.பிரதிபா மகாநாமஹேவா






## தவிசாளரின் செய்தி

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டதும் கூட்டிணைக்கப்பட்டதுமான தேசிய மனித உரிமை நிறுவனமாகிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் எனது பொறுப்பாக 2014 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கைக்கான ஒரு செய்தியை வழங்குவது உண்மையில் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.
தற்பேதைய ஆணைக்குழுவானது 2014 ஆம் ஆண்டில் இலங்கை அரசியலமைப்பின் 18 வது திருத்தம் ஏற்றுக் கைக்கொள்ளப்பட்டதினைத் தொடர்ந்து பாராளுமன்றப்பேரவையினால் செய்துகொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இரண்டாவது தடவையாகவும் 2014 இல் தற்போதைய ஆணைக்குழுவானது நியமிக்கப்பட்டது.


இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கையில் ஒரு சிறந்த மனித உரிமை கலாச்சாரத்தை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன் எல்லோரதும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக மனித உரிமைகளை பாதுகாத்து ஊக்குவிப்பதற்கான ஒரு பரந்துபட்ட ஆணையை கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையானது 2014 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவால் பொறுப்பெடுக்கப்பட்ட செயற்பாடுகளை முன்வைக்கிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தமது பெறுமதியான ஆதரவினை வழங்கிய பொதுநலவாய செயலகம், ஐநா முகவரமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச அதிகாரவமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியறிதல்களைஇந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இறுதியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணியாட்தொகுதியினர் ஆகியோா் எப்பொழுதும் தமது முழுமையான அர்ப்பணிப்பை வழங்கி வருகின்றமைக்கு எனது நன்றியுடன் கூடிய பாராட்டுதல்களை பதிவிற்காக தெரிவியாதுவிடின் நான் எனது கடமையில் இருந்து தவறியனாவேன். மேற்படி சொல்லப்பட்ட எல்லாத் தரப்பினரும் தமது முழுமையான ஆதரவினை ஆணைக்குழுவின் அபிலாஷைகளை சாதித்துக்கொள்ளும் அதன் முயற்சியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தமது ஆதரவினைத் தொடர்ந்தும் தருவார்கள் என நான் நம்பிக்கையுடன் உள்ளேன்.

ஊவா மாகாணதேர்தல் கண்காணிப்பில் பங்குபற்றிய பின்னா் தனது வீடு திரும்பி வந்து கொண்டிருந்தபொழுது மோட்டார வாகன விபத்தை சந்தித்த கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த செல்வி. துஷித்த சமரசேகரவின் அகாலமரணத்தை நான் இங்கே குறிப்பிட்டு எனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கை யுத்தத்திற்குப் பிந்திய யுகத்தில் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்கும் இந்த நாட்டில் மீளிணக்கத்தை கொண்டு வருவதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கைகோர்க்குமாறு நான் மிகவும் விநயத்துடன் எல்லோருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.



இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசா் பிறியந்த R P பெரேரா
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டத்தினால் சுயாதீனமானதும் நிதி ரீதியாக நிலைத்திருக்கக்கூடியதுமான ஒரு நிறுவனமாக இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. ஆணைக்குழுவைச் சட்டமானது தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் தரத்தினை உள்ளடக்கிய பரிஸ் கோட்பாடுகளைமையப்படுத்தியதாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவானது அரசியலமைப்பின் அத்தியாயம் iii இல் உள்ளடக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தலுடன் ஏனைய தொழிற்பாடுகளையும் சட்டத்தின் பிரிவு 10 இற்கு அமையத் தொழிற்படுகின்றது. மேலும் மனித உரிமைகளை ஊக்குவித்து பாதுகாத்தலில் சட்டவாக்கங்களின் உருவாக்கம் மற்றும் நிர்வாக ரீதியான வழிகாட்டுதல்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு மதியுரை அளித்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சர்வதேச சட்டங்களுக்கு அங்கத்தவராகுதல் அல்லது ஏற்று ஒழுகுதல் என்பவற்றின் தேவைகளையும் அரசுக்கு வலியுறுத்துகின்றது.

ஆணைக்குழு தனது தொழிற்பாடுகளை செயற்படுத்தும் முகமாக அது சட்டத்தின் பிரிவு 11 இல் சொல்லப்பட்டவாறாக பரந்த அதிகாரமளிக்கபட்டுள்ளது. இதில் உள்ளடங்குவனவாக எந்த நீதிமன்றத்தின் முன்னாலும் நிலுவையாக உள்ள அடிப்படை உரிமைகள், மீறுகை அல்லது மீறக்கூடியவை தொடர்புடைய எந்த செயன்முறைகளிலும் நீதிமன்றத்தின் அனுமதியுடன தலையிடுவதற்கான அதிகாரம் நீதித்துறை கட்டளை மூலமோ அன்றேல் தடுத்து வைத்திருக்கும் இடங்களைப் பாதுகாப்பதன் ஊடாகவோ அல்லது தடுத்து வைக்கப்பட்ட ஆளின் நலனோம்பலை கண்காணிப்பதற்கோ மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை முன்னேற்றுவதற்குத் தேவைப்படும் ஏதாவது சிபார்சுகளைச் செய்வதற்கும் தலையிடுவதற்கான அதிகாரத்தை உள்ளடக்குகிறது. ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் ஒன்றாக அது ஆய்வுகளைப் பொறுப்பெடுப்பதற்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைகளை நடாத்துவதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதால் மனித உரிமைகள் தொடர்பான கல்வியை வழங்குவதற்கும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதும் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் ஒன்றாக உள்ளது.

மேலும் பிரிவு 11 (ஈ) குறிப்பிடுவதானது "அதன் தொழிற்பாடுகளை செயற்படுத்துவதற்கான தேவையானதும் பொருத்தமான ஏனைய விடயங்கள் அனைத்தையும் செய்தல் போன்றதாகும்" இதன் படி ஆணைக்குழுவானது தொழிற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு பரந்த அதிகாரங்களை இது வழங்குகிறது, ஆணைக்குழுவானது ஒரு தவிசாளரையும், நான்கு ஆணையாளர்களையும் கொண்டிருப்பதுடன் அவர்களுக்கு ஆணைக்குழுச் சட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொழிற்பாடுகளை மிகவும் வினைத்திறனாக செயற்படுத்தும் முகமாக ஆணைக்குழுவானது நாட்டின் பல்வேறு பாகங்களிலும் 10 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இந்தப் பிராந்திய அலுவலகங்களில் ஐந்து அலுவலகங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொழிற்படுகின்றன.

2014 ஆம் ஆண்டின்போது ஆணைக்குழுவானது கிளிநொச்சி முல்லைத்தீவு, நுவரேலியா, பொலநறுவை, புத்தளம் ஆகிய இடங்களில் நடமாடும் அலுவலகங்களின் தொழிற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் 2014 ஆம் ஆண்டில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல், கண்காணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த அத்தியாயங்களில் விபரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கண்காணிப்பு செயற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்பு செயற்பாடுகளாவன முன்னைய ஆண்டுகளைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் அதிகரித்து காணப்படுகிறது. 2013 ஆம் ஆண்டோடு

ஒப்பிடும்பொழுது முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டபொழுதிலும் 2014 இல் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என கருத்து தெரிவிக்கவில்லை.

மனித உரிமைகள் பாதுகாப்பு அத்தியாயம் ஒன்றானது சுயமையப்படுத்தப்பட்ட உரிமைகளை உரிமைகோரும் தனிநபர்களால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை, அம் முறைப்பாடுகள் வகைப்படுத்தப்பட்டவிதம், மனித உரிமைகள் மீறுகை தொடர்பான மதியுரைகளைக் கேட்டோரின் எண்ணிக்கை, முறைப்பாட்டு முடிவுறுத்தல்கள் என்பவற்றை எடுத்துக்காட்டுகிறது.

இரண்டாம் அத்தியாயமானது பயிற்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட நாட்களின் நினைவுகூருகை, வேறுபட்ட பங்காண்மையாளர்களுடன் ஒழுங்கு செய்யப்பட்ட ஊக்குவிப்பு செயற்பாடுகளில் பங்குபற்றுகை என்பவற்றின் தகவல்களை வழங்குகிறது. மூன்றாவது அத்தியாயமானது அதிகார ரீதியான நடவடிக்கைகள், பரிசோதிப்புக்கள், மற்றும் தேர்தல் செயற்பாடுகளை கண்காணித்தல் உட்பட்ட கண்காணிப்பு செயற்பாடுகளை வெளிப்படுத்துகிறது.

அத்தியாயம் நான்கு நிதிச் செலவினங்கள்,இருக்கும் மனிதவளம், உட்கட்டமைப்பு மாற்றங்கள், பணியாட்தொகுதியினரின் இயலுமைகளை கட்டியெழுப்பும் பயிற்சிகள், சர்வதேச மகாநாடுகள் மற்றும் பயிற்சிகளில் பங்குபற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஐந்தாம் அத்தியாயமானது பிராந்திய அலுவலகங்களின் முறைப்பாட்டு விபரங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை விபரிக்கிறது. ஆறாம் அத்தியாயமானது சிவில் சமூகக் கூட்டங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான உறவுமுறைகள், அதில் நடாத்தப்பட்ட கூட்டங்கள் என்பவற்றின் மீதான தகவல்களை உள்ளடக்குகிறது. ஏழாவது அத்தியாயம் 2014 இல் மனித உரிமை நிலைமைகளை விபரிக்கிறது.

# அத்தியாயம் 01

## மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

### 1.1 முறைப்பாடுகளைக் கையாளுதல்

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 10(அ) மற்றும் (ஆ) யின் கீழ் விபரிக்கப்பட்ட தொழிற்பாடுகளின் பிரகாரமாக ஆணைக்குழுவானது உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் இரு விசேட இடுபணிகளை மேற்கொள்வதற்கு பொறுப்பளிக்கப்படுகிறது.

10(அ) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய அடிப்படை உரிமைகளை ஒட்டிய ஏற்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக நிறைவேற்று மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகளை நெருக்கமாக கண்காணித்தல்

10(ஆ)அடிப்படை உரிமைகள் மீறுகை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல், மற்றும் அதனைத் தொடர்ந்து அவற்றை தீர்த்து வைக்கவோ அல்லது அவற்றைத் தீர்ப்பதற்கோ நடவடிக்கைகளை எடுத்தல்.

அந்த தொழிற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான ஆணைக்குழுவுக்கு பிரிவு 11 அதிகாரங்களை வழங்குகிறது.

2014 ஆம் ஆண்டில் இந்தப் பணிகளானவை பிரதானமாக விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவினாலும் பிராந்திய அலுவலகங்களாலும் நிறைவேற்றப்பட்டது. எந்த நபரும் ஆணைக்குழுவிடம் எழுத்து மூலமான மனுவின் ஊடாகவோ அல்லது தனிப்பட்ட முறையில் தலைமைக் காரியாலயத்திற்கோ அல்லது பிராந்திய அலுவலகத்திற்கோ தொலைபேசி அழைப்பை மேற்கொள்வதன் மூலமோ ஒரு முறைப்பாட்டை தாக்கல் செய்ய முடியும். ஆணைக்குழுவானது பின்வரும் முறையில் முறைப்பாடுகளை புலனாய்வு செய்கிறது. முறைப்பாடுகளானது ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து முறைப்பாட்டாளரிடம் ஒரு பதிவு இலக்கம் மற்றும் முறைப்பாட்டை பெற்றுக்கொண்டதை ஏற்றுக்கொள்ளும் சீட்டு என்பன முறைப்பாட்டாளரிடம் வழங்கப்படும். முறைப்பாடானது ஆணைக்குழுவின் ஆணைக்குள் வருகின்றதா எனப் பரிசோதிப்பதற்கு முறைப்பாடு மதிப்பீடு செய்யப்படும்.

அடிப்படை உரிமைகளுடன் தொடர்பான முறைப்பாடுகளானவை உரிய உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டு அவ் முறைப்பாடுகளானவை தொடரப்படக்கூடியவைகளா என அங்கே தீர்மானிக்கப்படும். அதன் பின்பு தொடர்புடைய விடைபகர்னர்களின் அறிக்கைகள் மற்றும் அவதானிப்புக்களானவை பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இவ்விடயம் தொடர்பான ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. அதன் பின்பு முறைப்பாட்டாளருக்கும் விடைபகரும் தரப்பினருக்கும் புலனாய்வுகளை முன்னெடுத்து செல்லும் முகமாக அழைப்பாணைகள் அனுபப்பப்படும். அழைப்பாணைகள் மற்றும் உரிய தரப்புக்களை அழைத்தல் விடயங்களில் உச்ச வினைப்பயனை ஒழுங்குபடுத்தி முன்னேற்றும் நோக்கத்திற்காக விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவால் ஒரு விசேட பொறிமுறை விருத்தி செய்யப்பட்டு அது தலைமைக்காரியாலத்தால் அமுல்படுத்தப்படுத்தப்படுகிறது. அதாவது அழைப்பாணைகள் ஒரு மாதாந்த அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் அவசர விசாரணைகள் தேவைப்படும் விடயங்களில் அவ் விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முதலாம் வகுப்பில் பாடசாலைகளுக்கு அனுமதித்தல், சித்திரவதை, தடுத்து வைப்பு மீதான முறைப்பாடுகள், மற்றும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் விசேட வேண்டுகோள்கள் என்பன அவ்வண்ணமான விடயங்களாகும்.

2014 ஆம் ஆண்டு தலைமைச் செயலகமானது 5074 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. அவற்றில் 3730 மாத்திரமே ஆணைக்குழுவின் ஆணைக்குள்வருபவையாகும். ஆணைக்குழுவின் ஆணைக்குள்உள் ளடங்காத முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1032 ஆக இருந்தது. பிராந்திய அலுவலகங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4082 ஆகும். முறைப்பாடுகள் தொடர்பான எல்லாத் தகவல்களும் ஆணைக்குழுவின் தரவுத்தளத்தில் சேமிக்கப்படுகிறது. தரவுப் பதிவானது நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆணைக்குழுவானது அவ்வாறு சேமிக்கப்பட்ட தரவுகளை தேவைப்படும்பொழுது பரிசோதிக்கிறது.

## 1.2 ஆலோசனைச் சேவைகள்

பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளைப் பெறுவதற்கு மக்கள் ஆணைக்குழுவுடன் தொடர்புபடுகின்றனர். மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக முறைப்பாட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் மதியுரை வழங்குவதற்கான ஆலோசனைகளானவை நாளாந்தம் இடம்பெறுகின்றன. ஆட்களை வேறு நிறுவனங்களுக்கு வழிநடாத்துதலும் நாளாந்தம் இடம்பெறுகிறது. ஒரு கடமை உத்தியோகத்தரானவர் இந்நோக்கத்திற்காக நாளாந்தம் செயற்படுத்தப்படுகிறார். அவர் நாளாந்தம் 30 - 40 முறைப்பாடுகளைக் கவனிக்கிறார். 2014 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைமைச் காரியாலயத்திடமிருந்து மதியுரைகளைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் எண்ணிக்கையானது 3170 ஆகும்.

இதே சேவையானது பிராந்திய அலுவலகங்களிலும் வழங்கப்படுகிறது. பிராந்திய அலுவலகங்களில் ஆலோசிப்பிற்காக சமூகமளித்த ஆட்களின் எண்ணிக்கையைப் பார்ப்பதற்கு அத்தியாயம் 5 யைப் பார்க்குக.

## 1.3 அவசர அழைப்பு வசதி

2014 ஆம் ஆண்டிலே பொதுமக்கள் 24 மணித்தியாலமும் தொடர்பு கொள்வதற்காக அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமானது தொழிற்பட்டிருந்தது. சுலபமாக சென்றடையக்கூடிய அவசர அழைப்பு இலக்கம் ஒன்றை (1996) அறிமுகப்படுத்தியதானது ஆண்டின்பொழுது இச்சேவையை சென்றடையும் வழியை அதிகரிக்கச் செய்தது. கைதுகள், தடுத்து வைப்புக்கள், தொடர்புடைய விடயங்கள் அவசர வழிச்சேவை மூலம் கவனிக்கப்படக் கூடியதாக இருந்தது.

## 1.4 முறைப்பாடுகளை வகைப்படுத்துதல்

2014 ஆம் ஆண்டு தலைமைக்காரியாலயத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் வகைப்பாடு

| வகை | முறைப்பாடுகளின் இயல்பு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனிப்பட்ட சுதந்திரம் | | |
| | சித்திரவதை | 322 |
| | உடல் மற்றும் உளத் தொந்தரவு | 481 |
| | பாலியல் தொந்தரவு | 03 |
| | கைது / தடுத்து வைப்பு | 287 |
| | தடுத்து வைப்பு நிலைமைகள் | 07 |
| | காவலில் இருக்கும்பொழுது இறத்தல் | 07 |
| | ஆட்கள் காணாமற்போதல் | 15 |
| | கடத்துகைகள் | 02 |
| | சூட்டுச் சம்பவங்கள் | 02 |
| | சுட்டுக்கொல்லப்படுதல் | 02 |
| வேலைவாய்ப்பு | | |
| | ஆட்சேர்ப்பு | 95 |
| | ஓய்வூதியம் | 11 |
| | நன்மைகள் | 56 |
| | பதவி உயர்வு | 259 |
| | சேவை விஸ்தரிப்புக்கள் | 14 |
| | சேவை நிபந்தனைகள் | 184 |

| | | |
|---|---|---|
| | இடமாற்றங்கள் | 124 |
| | பணி முடிவுறுத்தல்கள் | 52 |
| | பணி இடைநிறுத்தல்கள் | 66 |
| | ஊழியர் சேமலாபநிதியம்/ ஊழியர் நம்பிக்கை நிதியம் | 14 |
| | சம்பளம் | 32 |
| | ஓய்வூதியம் | 79 |
| | வெளிநாட்டு பயிற்சி மற்றும் புலமைப் பரிசில்கள் | 01 |
| | | |
| கல்வி | | |
| | பிரபல்ய பாடசாலைகளுக்கு அனுமதித்தல் | 261 |
| | பல்கலைக்கழக அனுமதி | 13 |
| | கல்லியற்கல்லூரிகள் | 05 |
| | டிப்ளோமா கற்கைநெறிகள் | 04 |
| | சான்றிதழ் விடயங்கள் | 08 |
| | மாணவர்களின் ஒழுக்க விடயங்கள் | 09 |
| | பரிட்சைகள் | 12 |
| | அதிபர்கள் தொடர்பான விடயங்கள் | 13 |
| | தெரிவு முறைமை | 03 |
| | புலமைப் பரிசில்கள் | 01 |
| | வசதிகள் | 05 |
| | மூடிய பாடசாலைகள் | 02 |
| | பாடசாலைக் கட்டணங்கள் | 03 |
| | மேலதிக வகுப்புக்கள் | 01 |
| | | |
| சமூகசேவைகள் மற்றும் அரச நலனோம்பல் | | |
| | இழப்பீடு | 29 |
| | விவசாயிகளுக்கான நலனோம்பல் | 03 |
| | காப்புறுதி (சமூக நலனோம்பல்) | 04 |
| | கடன் விடயங்கள் | 06 |
| | சமுர்த்தி | 02 |
| உட்கட்டமைப்பு | | |
| | நீர் | 17 |
| | வீதிகள் | 31 |
| | மின்சாரம் | 34 |
| | | |
| சுகாதாரம் | மருத்துவ கவனயீனம் | 12 |
| | நோயாளியின் உரிமை | 01 |
| | | |
| சுற்றாடல் | | |
| | பொது தொந்தரவு | 15 |
| | வளி மாசடைதல் | 01 |
| | ஒலி மாசடைதல் | 01 |
| | நீர் மாசடைதல் | 01 |
| | | |
| நிர்வாக விடயங்கள் | அனுமதிகள் / உரிமங்கள் | 27 |
| | வரி வழங்குனர் | 02 |
| | கூறுவிலை விடயங்கள் | 08 |
| | பதிவு செய்தல் விடயங்கள் | 04 |
| | கோட்டா அளவு | 01 |
| | நியமனம் | 02 |
| | உள்ளூராட்சி செயன்முறைகள் | 01 |

| | | |
|---|---|---|
| காணி மற்றும் சொத்து | | 266 |
| செயற்பாடின்மை முறைப்பாடுகள் | | 443 |
| புலம்பெயர் தொழிலாளர் உரிமைகள் | | 28 |
| இயலாமையுயோரின் உரிமைகள் | | 01 |
| சிறுவர் உரிமைகள் | | 35 |
| மொழி உரிமைகள் | | 07 |
| மத உரிமை | | 05 |
| தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் | | 65 |
| வெளிப்படுத்தல் சுதந்திரம் | | 03 |
| **மொத்தம்** | | **3730** |

2014 ஆம் ஆண்டு பிராந்திய அலுவலகங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் அம் முறைப்பாடுகளின் வகைப்பாடுகளின் உள்ளடக்க அட்டவணைக்காக அத்தியாயம் 5 யை தயவு செய்து பார்க்குக.

## 1.5 முறைப்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருதல்

பின்வரும் அட்டவணையானது 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முறைப்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான காரணங்களை உள்ளடக்கிறது.

2014 ஆம் ஆண்டு தலைமைக்காரியாலத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகள்

| **முடிவுக்கு கொண்டு வரப்பட்டதற்கான** காரணம் | **2014 ஆம் ஆண்டில் தாக்கல் செய்து முடிக்கப்பட்ட முறைப்பாடுகள்** | **முன்னைய ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு 2014 இல் முடிக்கப்பட்ட முறைப்பாடுகள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதற்கான அடிப்படை கிடைக்கப்பெறாமை | 275 | 376 | 651 |
| முறைப்பாட்டாளர் விருப்புடையவராக இருக்கவில்லை | 171 | 282 | 453 |
| சிபார்சுகள் வழங்கப்பட்டது | 28 | 54 | 82 |
| தீர்த்து வைக்கப்பட்டது | 35 | 111 | 146 |
| நிவாரணம் வழங்கப்பட்டது | 97 | 183 | 280 |
| பின்வாங்குகைகள் | 95 | 128 | 223 |
| ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்படுதல் | 330 | 10 | 340 |
| வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது | 14 | 56 | 70 |
| நீதிமன்ற வழக்கு நிலுவையாக உள்ளது | 95 | 104 | 199 |
| ஆணைக்குழுவின் பார்வை எல்லைக்கு கீழ் வரவில்லை (பின்பு வெளிப்படுத்தப்பட்டது) | 470 | 177 | 647 |
| விதந்துரைக்கப்படுதல் | 150 | 07 | 157 |
| **மொத்தம்** | **1760** | **1488** | **3248** |

அதே ஆண்டிற்குள் கோப்புக்களை மூடுவதானது முறைப்பாட்டாளருக்கு பல்வேறுபட்ட அளவுகோல்களில் நிவாரணம் அளிக்கப்படுவதை குறித்து நிற்கிறது. அதற்கு மேலதிகமாக சிபார்சுகள் வழங்குவதிலும் நிவாரணம் வழங்கப்படுவதை குறித்து நிற்கிறது. தீர்த்து வைத்தல், விசாரணையின்பொழுது நிவாரணம் வழங்குதல், பதிலாக பொருத்தமான நிவாரணத்தை பெற்றுக்கொள்ளும் அடிப்படை மீது முறைப்பாட்டை மீளப் பெற்றுக்கொள்வதற்கான முறைப்பாட்டாளரின் இணக்கம் என்பவற்றை இது உள்ளடக்குகிறது. அடிப்படை உரிமைகள் தெளிவாக மீறப்பட்டுள்ள சமயங்களில் மாத்திரமே சிபார்சுகள் வழங்கப்பட்டன. அத்துடன் மீறுகைக்கான நிச்சயத்திற்கான திண்மமான ஆதாரங்கள் இல்லாத நிலையில் ஏனைய கட்டளைகள் / பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

விசாரணையின்பொழுது தகவல்கள் ஏதும் வழங்கப்படாது இருப்பின் அது அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. அவ்வாறான நிலையில் விடயமானது ஆணைக்குழுவின் ஆணைக்குள் வராதிருக்கையில் விதந்துரைப்பின் நிமித்தமாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட முடியாததாக இருக்கும். பல்வேறுபட்ட காரணங்களுக்காக தரப்பினரால் காட்டப்படும் விருப்பின்மை நிமித்தமாக தொடருதல் சிரமமானவைகள், என்பவை நிவாரணம் கிடைக்க முடியாத உதாரணங்களாக குறிப்பிடக்கூடியவை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவைகள் முடிவுக்கு கொண்டு வரப்படுவதுடன் அப்பொழுது அவை ஒரு சட்ட நீதிமன்றத்தினாலோ மற்றொரு அதிகாரசபையினாலோ கவனிக்கப்படும்.

## 1.6 பின்தொடர் நடவடிக்கைகளும் அமுல்படுத்தப்பப்படாத சிபார்சுகளும்

தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்து புலனாய்வு செய்த பிற்பாடு மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கும்பொழுது சிபார்சுகளைச் செய்கிறது. மனித உரிமைகள் ஆணைக்குழுவானது வருடக் கணக்காக வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டனவா எனப் பரிசோதிப்பதற்கு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. பின்பற்றப்படும் செயன்முறைகளாவன ஆரம்பத்தில் விடயத்தின் முன்னேற்றம் குறித்து பதிலளிப்பவர்களிடம் இருந்து விசாரித்தல்,மற்றும் பதிலளிக்க தவறும் பட்சத்தில் அவருக்கு ஒரு நினைவூட்டல் அனுப்புதலாகும். பதிலளிப்பவர் பதிலளிக்க தவறும் பட்சத்தில் அல்லது சிபார்சுகளை அமுல்படுத்தாத பட்சத்தில் தவிசாளருக்கு முன்பாக மீள் பரிசீலிப்புக்காக அது எடுத்துக்கொள்ளப்படும். 136 இவ்வாறான சம்பவங்கள் தவிசாளருக்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

## 1.7 தெரிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள்

சுற்றாடல் உரிமைகளைப் பாதுகாத்தல்

HRC/AP/401/2012

மனுதாரர்கள் : வசந்தகுமாரி ரத்நாயக்க மற்றும் A M N G S பண்டார டனசேகர

பதிலளிப்பவர்கள் : வதிவிட வியாபார முகாமையாளர், இலங்கை மகாவலி அதிகாரசபை

சட்ட ஒழுங்குவிதிகளைப் பின்பற்றாது தொழிற்படும் சீமெந்துக் கலவை தொழிற்சாலைக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது குறித்து மகாவலி அதிகாரசபை மற்றும் பிரதேச சபைக்கு எதிராக ஒரு முறைப்பாடு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டது.

முறைப்பாட்டினால் மனுதாரர் இந்த தொழிற்சாலையின் நடவடிக்கையால் ஒலிமாசடைதல் மற்றும் வளி மாசடைதலை ஏற்படுத்தியிருந்ததாக குறிப்பிட்டிருந்தார். விசாரணையின்பொழுது மகாவலி அதிகாரசபையானது பிரதேச சபையாளருக்கு சொல்லப்பட்ட தொழிற்சாலையின் உரிமையாளருக்கு வியாபார உரிமம் வழங்குவதை நிறுத்துமாறு கேட்டிருந்தது வெளிப்படுத்தப்பட்டது. பிரதேச சபையால் வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஆனது செல்லுபடியற்றதாக இருந்ததுடன் வியாபாரமானது இரத்து செய்யப்பட்டது.

ஆகவே ஆணைக்குழுவானது பதிலளிப்பவரிடம் சீமெந்து கலவை தொழிற்சாலையின் சொந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சிபார்சு செய்தது. ஏனெனில் அந்த வியாபாரமானது உரிய அதிகாரசபையின் அங்கீகாரமின்றி தொடரப்பட முடியாததாகும்.

## 2. சங்கம் அமைப்பதற்கான உரிமை

HRC/1356/143

மனுதாரர் : M L D D S குமார மற்றும் ஏனையோர்

விடைபகினர்: உபவேந்தர் சப்ரகமுவ பல்கலைக்கழகம் பெலிகுலோயா

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு குழு மாணவர்களினால் குறித்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மாணவர் சபையை நியமிக்காததன் நிமித்தம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

விடைபகினரால் கொடுக்கப்பட்ட பிரதான காரணமானது மாணவர்களின் சட்டத்திற்கு மாறானதும், ஒழுக்க ரீதியற்றதமான செயற்பாடுகள் மேற்படி தீர்மானத்தை எடுப்பதற்கு நிர்வாகஸ்தர்களை இட்டுச் சென்றதாக சொல்லப்பட்டது.

விசாரணையின் பின்னர் ஆணைக்குழுவானது விடைபகினரிற்கு மாணவர் சபையை அமைப்பதற்கான எல்லாப் படிநிலைகளையும் எடுக்க வேண்டுமென சிபார்சு செய்ததுடன் மாணவர்களும் பல்கலைக்கழகத்தின் நிர்வாக ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுக்காற்று சட்டங்களை பின்பற்றி மதிப்பளிக்க வேண்டுமெனவும் அழுத்தியுரைத்தது.

## 3 சித்திரவதை செய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை HRC/MT/155/13/G

மனுதாரர் : K.D. ஜீவன் சுரேஷ்

விடைபகினா்: வெலிகம பொலிஸ் நிலையத்தின் உபபொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இரு கான்ஸ்டபிள்கள்

கைது செய்யப்படும்பொழுது பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்பொழுதும், சித்திரவதை செய்யப்பட்டதாக முறைப்பாடு செய்யும் ஒரு மனுதாரர் ஆனவர் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனது வீட்டிற்கு காலை 3.00 மணியளவில் வந்ததாகவும், பொலிஸ்நிலையத்திற்கு காலை 9.00 மணிக்கு வரும்படி எழுத்து மூலமான அறிவித்தலைக் கொடுத்ததாகவும் குறிப்பிட்டார். ஒரு மணித்தியாலத்திற்கு பின்னா் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரது வீட்டிற்கு வந்து கதவைத் திறக்குமாறு நிர்ப்பந்தித்து அவரை தடிகளாலும், கைகளாலும் அடித்துள்ளனர். பின்பு அவர் இழுத்துச் செல்லப்பட்டு ஜீப்பில் ஏற்றப்பட்டு பொலிசாரால்அழைத்துச்செல்லப்பட்டுள்ளார். மனுதாரர் ஆனவர் அவசர அழைப்பு இலக்கமாகிய 119 இற்கு அவரின் விவாகத்திற்கு புறம்பான தொடா்பைக் கொண்டிருந்த ஒரு பெண்ணால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருந்தார். மனுதாரர் ஆனவர் காலை 11.00 மணியளவில் நீதிமன்றத்திற்கு முன்கொண்டு வரப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

விசாரணைகள் மூலம் பாதிக்கப்பட்டவர் பொலிசாரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டது வெளிப்படுத்தப்பட்டதுடன் ஆணைக்குழுவானது மனுதாரருக்கு நட்டஈடு செலுத்தும்படி சிபார்சு செய்திருந்தது.

# அத்தியாயம் 2

## மனித உரிமைகளை ஊக்குவித்தல்

### 2.1 அறிமுகம்

மனித உரிமைகளை நிலைநாட்டுவதானது பாதுகாப்பு ஏற்பாடுகள் ஊடாக மாத்திரம் சாதித்துக்கொள்ள முடியாதது. இந்த உண்மையை அங்கீகரித்துக்கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது வேறுபட்ட இலக்கு குழுக்களிடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வையும் அறிவையும் முன்னேற்றுவதற்கு அதனது ஆணைக்குள்ளாக முக்கியமான பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளை ஊக்குவிப்பதும் கல்வியூட்டுவதும் ஆணைக்குழுவின் சொந்த தொழிற்பாடுகள் மற்றும் நோக்கங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிவிப்பதுடன் சம்பந்தப்படக்கூடியது என்பதுடன் மனித உரிமைகள் களத்தின் பல்வேறுபட்ட முக்கியமான கேள்விகள் தொடர்பான கலந்துரையாடல்களையும் ஊக்குவித்தல், கருத்தரங்குகளை நடத்துதல், ஆலோசனைச்சேவைகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல், மற்றும் சுவரொட்டிகள், துண்டுபிரசுரங்கள், கையேடுகள் போன்ற மனித உரிமை பிரசுரங்களை தயாரித்து பரப்புதலிலும் ஈடுபடுகிறது. 2014 இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நாட்டின் பல பாகங்களிலும் பல மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. அத்துடன் மனித உரிமை ஆவணங்களை பிரசுரித்து பொதுமக்களிடையே அவற்றைப் பரப்பியது.

### 2.2 மனித உரிமைகள் மீதான கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிள் வளவாளர்கள் பல்வேறுபட்ட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் சமூகமளித்த நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் அட்டவணை ஒன்றில் தரப்படுகிறது.

| எண். | திகதி | தலைப்பு / விடயம் | இலக்கு குழு | ஒழுங்கு செய்தோர் |
|---|---|---|---|---|
| 01 | 06.05.2014 | வேலைசெய்யும் பெண்களின் வாழ்வும் மன அழுத்தமும் | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் பணியாட்தொகுதியினர் | தேசிய மொழி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு |
| 02 | 11.06.2014 | சட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் | பாடசாலை மாணவர்கள் | சட்ட மாணவர்கள் மனித உரிமைகள் இயக்கம் கொழும்பு 12 |
| 03 | 21.08.2014 | சிறுவர்கள் பெண்களுக்கு எதிரான தொந்தரவுகளை மீளக் குறைப்பதற்கான விஞ்ஞான ஆய்வுகள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்களிப்பு | பொலநறுவை மாவட்டத்திலுள்ள பொலிஸ்நிலையங்களிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகள் | அனுராதபுர பிராந்திய அலுவலகம் |
| 04 | 15.09.204 | வேலையிடத்தில் பாலியல் தொந்தரவுக்கு எதிரான கொள்கை | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் பணியாட்தொகுதியினர் | பாலியல் அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான சபையுடன் கூட்டிணைந்த பெண்கள் தொடர்பான தேசியக்குழு மற்றும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு |
| 05 | 19.09.2014 | அடிப்படை உரிமைகள் (தமிழ் மூலம்) | புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தமிழ்மொழி மூலமதுவரி உத்தியோகத்தர்கள் | மதுவரித் திணைக்களம் வடமேல் பயிற்சி நிலையம் வாரியப்பொல |
| 06 | 17.10.2014 | வேலையிடத்தில் பாலியல் தொந்தரவுகளுக்கிடையிலான கொள்கை | அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அமைச்சின் பணியாட்தொகுதியினர் | அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அமைச்சு |
| 07 | 10.10.2014 | அடிப்படை உரிமைகள்/ மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபங்கு | பொலிஸ் உத்தியோகத்தர்கள் | பொலிஸ் சேவை பயிற்சி அலகு மிரிஹான |
| 08 | 02.11.2014 | மனித உரிமைகள் (தமிழ் மூலம்) | மனித உரிமைகள் பாதுகாப்பு நலனோம்பல் நிலையத்தின் உறுப்பினர் | மனித உரிமைகள் பாதுகாப்பு நலனோம்பல் நிலையம் கொழும்பு 14 |
| 09 | 06.12.2014 | மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிசுக்கு இடையிலான மனித உரிமை விடயங்கள் மீதான ஒரு வலைப்பின்னலைக் கட்டியெழுப்புதல் | திருகோணமலை மாவட்டத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் | இலங்கை மனித உரிமைகள் பிராந்திய அலுவலகம் திருகோணமலை |
| 10 | 18.12.2014 | செவிப்புலன் அற்றோரின் உரிமைகளை உறுதிப்படுத்தல் | கொள்கை வகுக்கும் அரச உத்தியோகத்தர்கள் | இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சமாசம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சு பத்தரமுல்ல |

## இலங்கை இராணுவ உத்தியோகத்தர்களுக்கான மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை இராணுவத்தின் மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்ட நிர்வாகமானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உத்தியோகத்தர்களிடையே மனித உரிமைகளின் அறிவை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு நடாத்தப்படும் அதன்வழி ஒரு நன்கு ஒழுக்கமுள்ள இராணுவத்தை உருவாக்குவதற்காக நடாத்தப்படும் அவர்களது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவியளிக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்ட நிர்வாகமானது 35 நிகழ்ச்சித்திட்டங்களை அட்டவணைப்படுத்தியிருந்ததுடன் இ.ம.உ.ஆ தலைமைக்காரியாலயத்தின் பணியாட்தொகுதியினர் கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, மாவட்டங்களில் இடம்பெற்ற 14 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்களை வழங்கியிருந்தனர்.இ.ம.உ.ஆ பிராந்திய அலுவலகங்களின் பணியாட்தொகுதியினரும் அம்பாறை, அனுராதபுரம், பதுளை, கண்டி, மாத்தறைமாவட்டங்களில்

நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்களாக பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவ உத்தியோகத்தர்கள் நன்மை பெற்றதுடன் 100 தமிழ்பேசும் இராணுவ உத்தியோகத்தர்களும் நன்மையடைந்தனர்.

| | திகதி | ஒழுங்கு செய்தோர் |
|---|---|---|
| 01 | 10.06.2014 | 52வது பிரிவு யாழ்ப்பாணம் |
| 02 | 11.06.2014 | 54வது பிரிவு கிளிநொச்சி |
| 03 | 18.07.2014 | அமைதி ஆதரவு நடவடிக்கை பயிற்சி நிறுவகம் இலங்கை குக்குலேகங்க |
| 04 | 11.08.2014 | 55வது பிரிவு மட்டக்களப்பு பயிற்சிப்பாடசாலை பெரியச்சேபளை மட்டக்களப்பு |
| 05 | 12.08.2014 | 55 வது பிரிவு ஆனையிறவு |
| 06 | 11.08.2014 | இலங்கை அமைதி ஆதரவு நடவடிக்கை பயிற்சி நிறுவகம் குக்குலேகங்க |
| 07 | 21.08.2014 | 224 பிரிகேட் இராணுவ முகாம் வவுனியா |
| 08 | 22.08.2014 | இலங்கை 4 ஆயுதப்படையினர் இராணுவமுகாம் கப்பென்பெர்க் திருகோணமலை |
| 09 | 17.09.2014 | கஜபாகு இராணுவப்பிரிவின் 6வது முகாம் புறுடி இல்லம் கொழும்பு 07 |
| 10 | 19.09.2014 | 14வது பிரிவு இராணுவ முகாம் அத்துரிய |
| 11 | 29.10.2014 | 5 (V) SLAWC திருகோணமலை |
| 12 | 30.102.104 | 2 (V)GR திருகோணமலை |
| 13 | 19.11.2014 | 7 SLAWC யாழ்ப்பாணம் |
| 14 | 20.11.2014 | FMA (N)காங்கேசன்துறை |

## ஒரு உரிமை அடிப்படையிலான பொதுச்சேவையை உறுதிப்படுத்துவதற்கான கடமைப் பொறுப்பாளர்களின் பொறுப்புக்கள் மீதான பயிற்சிப்பட்டறை

மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து மதித்து, நிறைவேற்றுவதற்கான பிரதான கடமைப் பொறுப்பாளர்களாக அரசு உள்ளது. மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளை உறுதிப்படுத்துவதற்காக பல அரசாங்க பொறிமுறைகள் உள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஒவ்வொரு வருடமும் பொதுச்சேவைக்கு எதிராக பல முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்கிறது. இந்த முறைப்பாடுகளானவை விசேடமாக பொதுச்சேவை உத்தியோகத்தர்களின் செயற்பாடின்மை தொடர்பானதாக உள்ளது. ஆகவே இந்தப் பகுப்பாய்வினை அடிப்படையாக கொண்டு ஒருநாள் விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறையானது பொதுச்சேவை அடிப்படையிலான ஒரு உரிமைகளை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்ற தலைப்பில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் விருத்தி செய்யப்பட்டது. முதலாவது நிகழ்ச்சித்திட்டமானது 13.10.2014 அன்று புத்தள மாவட்ட கலையரங்கில் இடம்பெற்றது. இந் நிகழ்ச்சித்திட்டத்தில் 60 தமிழ்மொழி மூலமான உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

ஏனைய நிகழ்ச்சித்திட்டமும் அதே இடத்தில் 13.12.2014இடம்பெற்றது. 60 க்கு மேற்பட்ட சிங்களமொழி மூலமான உத்தியோகத்தர்கள் அன்றைய தினம் பங்குபற்றியிருந்தனர்.

## பத்திரிகையாளர்களுக்கான மனித உரிமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி வழங்கும் முக்கியத்துவத்தை இனம் கண்டுகொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பத்திரிகையாளர்களை இலக்குவைத்து பயிற்சிகள் விருத்தி செய்யப்பட்டது. இரண்டுநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆனது பத்திரிகையாளர்களுக்கு 2014 நவம்பர் 07 – 08 ஆம் திகதி வரை மாத்தறை (Gaga Addara) ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மாத்தறை மாவட்டத்தின் பல்வேறு பாகங்களில் இருந்தும் நாற்பத்தைந்து (45) ஊடகவியலாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## இளைஞர்களுக்கான மனித உரிமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பூகோள உலகில் இளைஞர்கள் அரசியல், பொருளாதார, சமூக செயன்முறையில் துடிப்பாக ஈடுபடுகின்றனர். அவர்கள் நாட்டின் எதிர்காலத் தலைவர்களாகவும் உள்ளனர்.

இ.ம.உ.ஆ ஆனது ஒரு விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை இளைஞர்களுக்காக விருத்தி செய்து அதன் முதலாவது நிகழ்ச்சித்திட்டமானது 2014நவம்பர் 13, 14, மற்றும் 15 ஆம் திகதிகளில் 150க்கு மேற்பட்ட சிங்கள, தமிழ் பேசும் இளைஞர்களின் பங்குபற்றுகையுடன் நுவரெலிய வன திணைக்களத்தின் கலையரங்கில் இடம்பெற்றது.

ஆணைக்குழுவானது ஒரு விசேட பயிற்சிதிட்டத்தினை இளைஞர்களுக்காக விருத்தி செய்தது. அதில் உள்ளடங்குவனவாவன:

- மனித உரிமைகள் அடிப்படையிலான தலைமைத்துவம்
- மனித உரிமை விடயங்கள் மற்றும் கிராமங்களின் பிரச்சினைகளை இனம் காணுவதற்கான பங்குபற்றுகை அணுகுமுறை
- முகவராலயங்களில் இருந்து உரிய பரிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களை எவ்வாறு வசதிப்படுத்துவது
- மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் என்ற வகையில் இளைஞர் செயற்பாடு
- உரிமை அடிப்படையிலான பலவகை பொழுதுபோக்குகள்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது மனித உரிமைகளுக்கான ஐக்கியநாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தால் நிதி ரீதியாக ஆதரவளிக்கப்பட்டது.

## 2.3 மனித உரிமைகள் கல்விக்கான உரிமை

மனித உரிமைகள் தேசிய நிறுவகமான (NHRI) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நாட்டிலே சட்டம், கொள்கை மற்றும் செயற்பாட்டில் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கு கடப்பாடு உடையதாக உள்ளது.

2007 ஆம் ஆண்டுகளின் காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவகமானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை முதலாம் படிநிலையில் ஆசிரியர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கைந்நூல்களை அறிமுகம் செய்யவும் இரண்டாமபடி நிலையில் பாடவிதானத்திற்குள் மனித உரிமைகளை உள்ளடக்குவதன் ஊடாகவும் பாடசாலை கல்வி முறைமையில் மனித உரிமைகளினை அறிமுகம் செய்ய இணைந்து வேலை செய்வதற்கு அழைப்பு விடுத்தது. ஆகவே மனித உரிமைகளை பாடசாலை பாடவிதானத்தில் சேர்த்துக்கொள்வதானது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட விடயமாக இருந்ததுடன், உள்ளக ஆயுத முரண்பாட்டு நிலைமையிலும் பொழுது இடம்பெற்றதாக கூறப்படும் விடயங்களினை மற்றும் என்பவற்றினை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவால் செய்யப்பட்ட சிபார்சுகள் மற்றும் 2011-2016 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் செயற்திட்டம் ஆகியவற்றாலும் கருத்திற்கொள்ள வேண்டமென அழுத்தியுரைக்கப்பட்டது.

இ.ம.உ.ஆ ஆனது கல்வி முன்னேற்ற இலங்கைச் சங்கத்தினை (SLAAED) நிபுணத்துவத்தை வழங்குவதற்கும் பாடசாலை பாடவிதானத்தில் மனித உரிமைகளை உள்ளடக்குவதற்கும் பணியாற்றுவதற்கும் அழைத்தது.

1. இரண்டாம்நிலைக் கல்விப் பாடவிதானத்தில் மனித உரிமைகளின் உள்ளடக்கத்தினைப் பலப்படுத்துதல்,வகுப்பு 6–9(வாழ்க்கைத்திறன்கள் மற்றும் பிரஜா உரிமை கல்வி விடயம்) மற்றும் வகுப்புகள் 10, 11 (சிவில் கல்வி) மற்றும் ஏனைய உரிய பாடங்கள்

2. மேற்படி பாடங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் இயலுமையை அதிகரிக்கும் முகமாக ஆசிரியர் சேவைக்காலப்பயிற்சியின் போது பயன்படுத்தப்படுவதற்கு ஒரு அறிவுறுத்தல் தொகுதியினைத் தயாரித்தல் மேற்படி இலக்குகளை சாதித்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் இங்கே விபரிக்கப்பட்டுள்ளன:

   a) பின்வருவனவற்றை நிச்சயப்படுத்திக்கொள்ளும் நோக்குடன் 6-9 வகுப்புகளுக்கான பிரஜா உரிமைக் கல்வியில் தற்போதுள்ள மற்றும் உத்தேச பாடவிதானத்தினை ஆராய்தல்

   b) அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சரத்துக்களை இனம் காணுதல் அவை போதியளவில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என மதிப்பிடுதல்

   c) வேறுபட்ட தரங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான மனித உரிமைகளை கூட்டிணைக்கும் நுழைவுப் புள்ளிகளை இனம் காணுதல்

   d) ஏனைய விடயங்களில் சிறந்தமுறையில் உள்ளடக்கக்கூடிய UDHR முறைமைகளில் இருந்து இனம் காணுதல் உதா. உறுப்புரை 25 (சுகாதாரம்,) சுகாதாரக்கல்வியில் உட்படுத்தப்படக்கூடியது. CE சுமை அதிகரிப்பை தடுக்கும் முகமாக முதல்மொழியில் (சிங்களம், தமிழ்) உட்படுத்தக்கூடிய ஏனைய உரிமைகள்

e) வகுப்புகள் 10 மற்றும் 11 இல் சிவில் கல்வி பாடங்களில் உள்ளிணைக்கப்படக்கூடிய உள்ளடகத்தை இனம் காணுதல்

மேற்படி இலக்குகளை சாதித்துக்கொள்வதற்காக SLAAED உடன்இ.ம.உ.ஆ 2014 ஆம் ஆண்டில் பணியாற்றியது.

## 2.4 தொழிலாளர் உரிமைகள் மீதான விசேட கலந்துரையாடலும் சர்வதேச தொழிலாளர் உரிமைக் கருவிகளின் பிரயோகத்தன்மையின் மீள்பார்வையும் (09 மே 2014)

இக்கலந்துரையாடலின் இலக்கானது நாட்டில் சர்வதேச தொழிலாளர் உரிமைக் கருவிகளின் பிரகாரம் தொழிலாளர் நியமங்களை அதிகரிக்கச் செய்வதாகும். அரசாங்க உத்தியோகத்தர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தான பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் உரிமை செயற்பாட்டாளர்கள் என்போர் பங்குபற்றுனர்களிடையே காணப்பட்டனர். இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களானவை:

- மகப்பேற்றுப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேசக் கருவிகள் மீதான அரசின் கடப்பாடு
- மகப்பேற்றுவிடுமுறைகளை அனுபவத்திற்கான வரப்பிரசாதங்கள் தடுக்கப்பட்ட தோட்டத்துறையைச் சேர்ந்த பெண் தொழிலாளர் படை

கலந்துரையாடல்களை மேலும் தொடர்ந்து அதனைப் வெளிப்படுத்துமாறு பங்குபற்றுனர்கள் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

## 2.5 இ.ம.உ..ஆகண்காட்சிக் கூடங்கள்

### 2.5.1 தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 2014

வடமேல் மாகாணத்திலுள்ள குளியாப்பிட்டியில் 2014 பெப்ரவரி 4 – 10 ஆம் திகதி வரை தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் ஆணைக்குழுவானது ஒரு கூடத்தை அமைத்திருந்தது. இம்உ.ஆபணியாட்தொகுதியினர் கூடத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டதுடன் பொதுமக்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினா். அக்கூடமானது உரிமை அடிப்படையிலான தலைமுறை விருத்தியினை பிரதிபலிப்பதாகவும் படரீதியான விபரிப்புக்களில் இம்உ்ஆஇன் பிரதான செயற்பாடுகளை பிரதிபலிப்பதாகவும் விருத்தி செய்யப்பட்டிருந்தது.

### 2.5.2 தேசிய நூலக 24வது ஆண்டின் நினைவின்போதான இ.ம.உ..ஆ இன் கூடம்

தேசிய நூலகமானது ஒரு அறிவுடைய சமூகத்திற்கான தேசிய நூலகத்தின் சேவைகள் என்ற கருப்பொருளின் கீழ் 2014 மே 06 – 09 ஆம் திகதி வரை ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தது. ஒழுங்குபடுத்தல் குழுவின் வேண்டுகோளின் பேரில் இ.ம.உ.ஆகூடத்தை அமைத்திருந்தது. இந்த நிகழ்வானது இம.உ.ஆ ஆவணப்படுத்தல் நிலையத்தால் வசதிப்படுத்தப்பட்டு இருந்தது.

## 2.6 சர்வதேச தினங்களை நினைவுகூருதல்

### 2.6.1 2014 சர்வதேச பெண்கள் தினம்

ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 08 ஆம் திகதியில் வரும் சர்வதேச பெண்கள் தினத்தை 2014 இல் கொண்டாடும் முகமாக இ.ம.உ.ஆ ஆனது பொதுத்துறையில் வேலையிடங்களில் பாலியல் தொந்தரவுக்கு எதிரான கொள்கை தொடர்பாக எவ்வாறு பிரச்சாரம் செய்வது என்பது தொடர்பாக அரச உயரதிகாரிகளுடன் இ.ம.உ.ஆ ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்தது. கொள்கை ஆவணமானது ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதுடன் ஆணைக்குழுவானது அதனை அமுல்படுத்துவதில் ஆர்வமாக உள்ளது.

அந்த வகையில் ஆணைக்குழுவானது இந்தக்கொள்கையை அமுல்படுத்துவதற்கான பின்தொடர் படிநிலைகளை எடுத்ததுடன், நாட்டின் எல்லா அரசாங்க நிறுவனங்களுக்கும் கொள்கை ஆவணத்தை பங்கீடு செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் படிநிலைகளை எடுத்தது. இந்தக் கலந்துரையாடலின் பின்னா் பல அரசாங்க நிறுவனங்கள் இந்தக்கொள்கை தொடர்பாக அவர்களை அறிவுறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தன. ஆணைக்குழுவானது பல நிறுவனங்கள் இதனை சாதகமாக எடுத்துக்கொண்டதைக் கவனித்ததுடன் அவர்களின் வேலையிடங்களில் கொள்கையை அமுல்படுத்தியதையும் அவதானித்தது.

### 2.6.2 சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரவளிக்கும் சர்வதேச தினம்

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை நினைவுகூர்ந்து 2014 ஜுன் 26 ஆம் திகதி இ.ம.உ.ஆ கேட்போர்கூடத்தில் ஆணைக்குழுவானது ஒருநாள் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியது.

சித்திரவதையின் சமூக மற்றும் சட்ட அம்சங்களை கலந்துரையாடுவதில் இது கவனம் செலுத்தியதுடன் சித்திரவதைக்கு எதிராக போராடும் நிறுவனங்களால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் பொறுப்புக்களையும் கலந்துரையாடுவதில் அது கவனம் செலுத்தியது. நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் ஒரு குழாம் கலந்துரையாடல் ஆனது தவிசாளர், ஆணையாளர்கள், ஒரு பல்கலைக்கழகத்தின் புலமையாளரின் பங்குபற்றுகையுடனும் பிரதி வழக்குரைஞர் நாயம் மற்றும் தேசிய மனநல நிறுவகத்திலிருந்தான ஒரு மருத்துவ நிபுணரின் பங்குபற்றுகையுடனும் நடாத்தப்பட்டது. பொலிஸ், சிறைச்சாலை இராணுவ அதிகாரிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.இவ்வாறான நிகழ்வுகள் 10 பிராந்திய நிலையங்களிலும் நடாத்தப்பட்டதுடன், நிகழ்ச்சித்திட்டத்தின் கருப்பொருளானது சித்திரவதையில் இருந்து விடுபடுதல் என்பதாக இருந்தது. கருப்பொருளை வெளிப்படுத்தும் ஒரு சுலோகமும் விருத்தி செய்யப்பட்டு இருந்தது.

**2013 இல் சித்திரவதை மீதான முறைப்பாடுகளின் பகுப்பாய்வு**

| ஆண்டு | தலைமை அலுவலகம் | பிராந்திய அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2006 | 528 | 317 | 845 |
| 2007 | 534 | 266 | 800 |
| 2008 | 439 | 337 | 776 |
| 2009 | 372 | 212 | 584 |
| 2010 | 361 | 170 | 531 |
| 2011 | 348 | 221 | 569 |
| 2012 | 381 | 154 | 535 |
| 2013 | 377 | 174 | 551 |

நிறுவனங்களின் பிரகாரம்

| நிறுவனம் | நூற்று வீதம் (%) |
|---|---|
| பொலிஸ்திணைக்களம் | 86.7 |
| பாடசாலைகள் | 4.5 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 5.8 |
| ஆயுதப்படை | 0.5 |
| ஏனையவை (காட்டு மற்றும் வரி திணைக்களம்) | 2.4 |

2013 இல் சித்திரவதை தொடர்பான மிக உயர்வான முறைப்பாடுகளின் எண்ணிக்கை (மேல் மாகாணம்)

| பொலிஸ் நிலையம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| வெல்லம்பிட்டிய | 10 |
| மிரிஹான | 10 |
| பாணந்துறை தெற்கு | 09 |
| வெலிக்கடை | 07 |
| மவுட்லவேனியா | 07 |
| பண்டாரகம | 06 |
| கிரியெல்ல | 06 |
| தலங்கம | 06 |
| பாணந்துறை வடக்கு | 05 |
| போதைப்பொருள் பணியகம் | 05 |
| பயகல்ல | 05 |
| வாதுவ | 05 |
| பொடல்ல | 05 |
| கொகூவல | 05 |
| புளத்சிங்கள | 05 |
| வத்தளை | 05 |
| மொறவக்கை | 05 |
| அவிசாவளை | 05 |
| சிலாபம் | 04 |
| மொறட்டுவ | 04 |
| ஜா எல | 04 |
| கடவத்தை | 04 |

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களினை ஆதரவளிக்கும் சர்வதேச தினநிகழ்வின்போதுசெய்யப்பட்ட கருத்திரையிருந்தான பிரித்தெடுப்பு)

### 2.6.3 முதியோர் உரிமை

முதியோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் (2000) உருவாக்கம் மற்றும் சிரேஷ்ட பிரசைகளுக்கான தேசிய பட்டயம் மற்றும் சிரேஷ்ட பிரசைகளுக்கான தேசிய கொள்கை (2006) என்பன இலங்கையின் வயதானவா்களின் சனத்தொகையினரின் கவனிப்புக்கான ஒரு தீர்மானகரமான படிநிலைகளாகும். மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்கான தேசிய செயற்திட்டம் மற்றும் LLRC அறிக்கை அரசாங்கத்தால் தற்போது கவனிக்கப்படுவதுடன் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை உத்தரவாதமளிக்கின்றது. இந்தக் கொள்கைகளானவை வயது முதிர்தல் மீதான நடவடிக்கையின் ஐநா சர்வதேச சட்டத்தில் உள்ளடங்கும் சர்வதேச பொறிமுறைகளின் கீழ் கட்டப்படுவதுடன் அதற்கு பின்பு வருவதாகிய வியன்னா வயது முதிர்தலில் சா்வதேச திட்டம் (1982) அதன் வழிமுறையான சா்வதேச திட்டம் (2002) வயது முதிர்ந்த ஆட்களுக்கான ஐநா கோட்பாடுகள், (1991) வயது முதிர்தல் மீதான ஐநா பிரகடனம் (1992) என்பனவாகும். அவ்வாறாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்பல் அமைச்சின் கீழ் பல்வேறு உள்நாட்டு பொறிமுறைகள் நிறுவப்பட்டுள்ளன. முதியோருக்கான தேசிய பேரவை, முதியோருக்கான தேசிய செயலகம், முதியோர்களைப் பரிபாலிக்கும் சபை, பிரதேச செயலக மட்டத்தில் முதியோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய சம்பந்தப்பட்ட சமூக சேவை உத்தியோகத்தா்களை நியமித்தல். சமூக சேவைகள் அமைச்சும் கிராம மட்டத்தில் முதியோர் குழுக்களை நாடு பூராகவும் நிறுவுவதற்கு படிநிலை எடுத்துள்ளது. அதேவாறாக அரசசார்பற்ற நிறுவனங்களாலும் மற்றும் தனியார் துறையினராலும் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அல்லது தனிப்பட்ட அக்கறையுடைய சிரேஷ்ட பிரசைகளின் உரிமைப்பாதுகாப்பு மற்றும் பராட்டுதலுடன் அவ்வாறான முனைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

இலக்குகளை எட்டுவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மைய ஆண்டுகளில் சிரேஷ்ட பிரசைகளின் மனித உரிமைகளை ஊக்குவித்து பாதுகாப்பதை நோக்கி வேலை செய்யும் பங்காண்மையாளர்களுடன் இலங்கையில் வயது முதிர்ந்த ஆட்களின் உரிமைகளைப் பாதுகாத்து கண்காணிப்பதை நோக்கிய சில நகர்வுகளை எடுத்துள்ளது.

### 2.6.4 சர்வதேச மனித உரிமைகள் தினம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2014 இல் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவுகூர்வதற்கு தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. தேசிய நிகழ்வானது 2014 திசெம்பர் 10ஆம் திகதி சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையம், BMICH கொழும்பு 07 இல் மு.ப. 9.30 – பி.ப. 1.00 மணி வரைக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இ.ம.உ.ஆ ஆனது ஐக்கியநாடுகளின் கருப்பொருளை செழுமைப்படுத்தி நாட்டின் தற்போதைய மீளிணக்க செயன்முறையை மையப்படுத்தியதாக ஆணைக்குழுவின் கருப்பொருள் அமைக்கப்பட்டது. ஆகவே இ.ம.உ.ஆ பின்வருவனவற்றின் ஊடாக மீளிணக்கத்தையும் ஐக்கியத்தையும் உறுதிப்படுத்தல் என்ற தலைப்பின் கீழ் ஒரு பல்தரப்பு கலந்துரையாடலை ஒழுங்கு செய்வதற்குத் தீர்மானித்தது

- அரசியல் பொறுப்பு
- கல்வியியல் பொறுப்பு
- நீதித்துறை பொறுப்பு
- அரசாங்கப் பொறுப்பு
- சிவில் சமூகப் பொறுப்பு
- பகிரங்க பொறுப்பு
- மத தலைவர்கள் பொறுப்பு

ஊடாக மீளிணக்கம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல்

திரு. லயனல் பெர்னாண்டோ அவா்களால் “இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் மீளிணக்க செயன்முறை” என்ற தலைப்பில் முக்கிய பேச்சானது வழங்கப்பட்டது. இவா் இலங்கையின் ஒரு சிறந்த பகிரங்க சேவையாளராகவும் பெயர்பெற்ற இராஜதந்திரியாகவும், முன்னாள் வழிப்படுத்துனராகவும் பணியாற்றியுள்ளாா்.

இந் நாளானது இலங்கை பூராகவும் இ.ம.உ.ஆஇன் பிராந்திய அலுவலகங்களால் நேரடியாக இதையொத்த நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## 2.7 அச்சடித்த ஏடுகள்

பொதுமக்களிடையே மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்காக மனித உரிமைகள் தொடர்பான பல்வேறுபட்ட ஆவணங்களை இ.ம.உ.ஆ அச்சடித்தது. பின்வரும் அச்சடித்த ஏடுகளானவை எல்லா இ.ம.உ.ஆ பிராந்திய அலுவலகங்களிடையேயும் விநியோகிக்கப்பட்டதுடன் தலைமைச் காரியாலயத்தால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின்போது பங்குபற்றுனர்களுக்கு அவற்றை விநியோகித்ததன் ஊடாக பயன்படுத்தப்பட்டன.

| பண்டங்கள் | மொழி |
|---|---|
| வேலையிடத்தில் பாலியல் தொந்தரவுக்கு எதிரான கொள்கை | சிங்களம், தமிழ், ஆங்கிலம் |
| இ.ம.உ..ஆ மீதான கையேடு | சிங்களம், தமிழ் |
| மரண தண்டனை மீதான அறிக்கை | சிங்களம், தமிழ் |
| மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் | சிங்களம், தமிழ், ஆங்கிலம் |

## 2.8 ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த ஆண்டில் இ.ம.உ.ஆ ஆனது இரு ஊடக நிகழ்ச்சிதிட்டங்களில் பங்குபற்றியது. 2014 சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் தொடர்புடைய வகையில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் “நுகசெவன நேரடி நிகழ்ச்சி”இல் 2014 சர்வதேச மனித உரிமைகள் தினம் மற்றும் இ.ம.உ.ஆ செயற்பாடுகளுடன் தொடர்பாக09.12.2014 இல் கலந்துரையாடல் இடம்பெற்றது. மற்றையது 19.12.2014 அன்று வேலையிடத்தில் பாலியல் தொந்தரவுகளுடன் தொடர்புடைய கொள்கை தொடா்பாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்புச் செய்யப்பட்ட “காந்தா பிரபோதய நிகழ்ச்சி”ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார மற்றும் தேசிய பெண்கள் மீதான குழு என்பவற்றினால் ஆதரவு அளிக்கப்பட்டது.

## 2.9 உள்ளகப் பயிற்சிகள்

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் பல்வேறு சந்தா்ப்பங்களில் உள்ளகப் பயிற்சிகளிற்காக வேண்டப்பட்டனர். 2014 இல் ஆணைக்குழுவானது தன்னார்வ உள்ளகப் பயிற்சியாளர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு கொள்கை தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் சட்ட மாணவர்கள், சட்டப் பட்டதாரிகள் மற்றும் ஏனைய துறையின் பட்டதாரிகள் என்போர் உள்ளகப்பயிற்சியில் இணைந்து கொண்டனர். ஆணைக்குழுவின் பல்வேறுபட்ட பிரிவுகளுக்கும் அவர்கள் இணைந்து செயற்படுவோராய் இருந்தனர்.

# அத்தியாயம் 3

## மனித உரிமைகளின் கண்காணிப்பு

### 3.1 தேசிய மொழிக் கொள்கை

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் நாட்டின் உத்தியோகபூர்வ மொழிகளாக உள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தேசிய மொழிக் கொள்கையை இலங்கையின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு படிநிலைகளை எடுத்துள்ளது. LLRC யின் சிபார்சுகளுடன் இடையீடானது தொடர்புடையதான மொழி உரிமை மீறுகை தொடர்பாக 166 முறைப்பாடுகளைப் இ.ம.உ.ஆ பெற்றுள்ளது. இவைகள் மாற்றுக்கொள்கைக்கான நிலையம் (CPA) ஆல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆணைக்குழுவானது சம்பவங்களை மீளாய்வு செய்வதுடன் பொறுப்படைய நிறுவனத்தினால் தேசிய மொழிக்கொள்கையின் அமுல்படுத்தலின் முன்னேற்றத்தை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கு படிநிலைகளை எடுத்துள்ளது.

முறைப்பாடுகளின் வகைப்படுத்தல்களானவை அட்டவணை 1 மற்றும 2 இல் தரப்படுகிறது.

**அட்டவணை இலக்கம்1**

பொறுப்புடைய அதிகாரவமைப்பின் பிரகாரம்

| நிறுவனங்கள் / பொறுப்புடையோர் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| நுகர்வோர் விவகாரங்கள் அதிகாரசபை | 67 |
| அமைச்சுக்கள் | 26 |
| திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் | 25 |
| பொலிஸ் | 08 |
| உள்ளுராட்சி அதிகாரசபைகள் | 09 |
| மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் | 05 |
| வங்கிகள் | 11 |
| கல்வியமைச்சு மற்றும் கல்வி தொடர்பான நிறுவனங்கள் | 13 |
| அரசசார்பற்றவைகள் | 02 |
| **மொத்தம்** | **166** |

**மூலம் : மொழி உரிமைகள் முறைப்பாட்டு கோப்புக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2014 அட்டவணை இலக்கம் 02**

2014 இல் முறைப்பாட்டு இயல்புகளின் பிரகாரம்

| முறைப்பாடுகளின் இயல்புகள் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பேயர் பலகைகள் / சுட்டிகள் | 21 |
| கடிதங்கள், சுற்றுநிருபங்கள், மதிப்பீடுகள் | 48 |
| உருவமைப்புக்கள் /விண்ணப்பங்கள் /அறிவித்தல்கள் | 20 |
| திருத்தப்பட்ட தமிழ் பதிப்புக்கள் | 03 |
| பொலிஸ் முறைப்பாடுகள் சிங்கள மொழியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் | 05 |
| இணையத்தளங்கள் | 10 |
| உற்பத்தி திகதி, பாவனை முடிவுத்திகதி, பாவனை விபரிப்பு | 59 |
| **மொத்தம்** | **166** |

மூலம் : மொழிக்கொள்கை முறைப்பாட்டு கோப்புக்கள்,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2014

## 3.2 தேர்தல் கண்காணிப்பு

### 3.2.1 மாகாணசபை தேர்தல்கள்

இ.ம.உ.ஆ ஆனது மேல் மற்றும் தென் மாகாணங்களின் தேர்தல் கண்கானிப்பு கூட்டங்களை நடாத்தியதுடன், தேர்தல் நாளன்று இ.ம.உ.ஆ இன் குழுவினரால் செய்யப்பட்ட அவதானிப்புக்கள் அடிப்படையாகக் கொண்டு சுருக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இ.ம.உ.ஆ ஆனது ஊவா மாகாணசபைத் தேர்தலில் மீறுகைகள் தேர்தல் தொடர்பான சட்டங்களின் மீறுகைகளானவை தெற்கு மேற்கு மாகாணசபைத் தேர்தல்களை விட ஒப்பீட்டளவில் அதிகளவாக இருந்தமையினால் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

2014 செப்ரெம்பர் 09 ஆம் திகதி தேர்தல்களிற்கு முன்பாக இ.ம.உ.ஆ இன் தலைமையில் ஒரு விசேட கூட்டம் மொனராகலையில் தேர்தல் ஆணையாளரின் பங்குபற்றுகையுடனும், தேர்தல் தொடர்பான கடமைகளில் நேரடியாக பங்குபற்றும் சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களுடனும் நடத்தப்பட்டது.

தென் மற்றும் மேல்மாகாணசபைகளின் இறுதி அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதிலும் அவற்றை மேற்கொள்வது என்பதிலுமான தடைச் சிரமங்களை ஆராய்வதற்கு பயன்படுத்தப்படுவதற்காக இ.ம.உ.ஆ இன் பொதுச் சிபார்சுகளுடன் தேர்தல் வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

### 3.2.2 2015 ஜனாதிபதி தேர்தல்

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2015 ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு அதற்கேயுரிய வினைத்திறனான ஆணையைப் பயன்படுத்தியது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அரசியல் வேட்பாளர்களுக்கு பொதுமண்டபங்கள், பொதுமைதானங்களை வழங்கும்பொழுது உள்ளூரராட்சி அதிகாரசபைகள் பாரபட்சமாக நடத்தியதற்கு இ.ம.உ.ஆ இல் முறைப்பாடு செய்யப்பட்டது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அதிகாரிகளுக்கும் செயலாளர்களுக்கும் ஆணையாளர்களுக்கும் இ.ம.உ.ஆ பணிப்புரைகளை வழங்கியது.

தனியார்துறையில் பணியாற்றும் பணியாளர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தவதற்காக இ.ம.உ.ஆதேர்தல் ஆணையாளர், தொழில் மற்றும் தொழிலமைச்சின் செயலாளர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் என்போருடன் 22.10.2014 அன்று ஒரு கூட்டத்தை நடத்தியது. தேர்தல் ஆணையாளர் அவர்கள் உத்தேச தூரங்கள் மற்றும் உரித்துடைய விடுப்புக்கள், முன்மொழிந்தார். இது இ.ம.உ.ஆ க்கும் பாராட்டக்கூடியதாக இருந்ததுடன் இ.ம.உ.ஆ தொழில் அமைச்சுக்கு சிபார்சுகளை வழங்கியது. இதன் பின்பு ஒரு ஒழுங்குவிதியாக வெளியிடுவதற்கு அமைச்சரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தனியார் துறையில் பணியாற்றும் பணியாளர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் தினத்தன்று தொழில் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் இ.ம.உ.ஆநெருக்கமாக பணியாற்றியது.
இ.ம.உ.ஆ ஆனது பின்வரும் அரச முகவரமைப்புக்களை தோ்தல் சட்டங்களை மீறியதாக தன்னார்வ தேர்தல் கண்காணிப்புக் குழுக்களால் சுட்டிக்காட்டப்பட்டதற்கு அமைய அழைத்தது.

- அரசாங்க அச்சக திணைக்களம்
- தபால் திணைக்களம்
- சிறைச்சாலைத் திணைக்களம்
- இலங்கை போக்குவரத்து சபை
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை

அதிகாரவமைப்புக்களிற்கு கள நிலைமைகள் தொடா்பில் விளக்கமளித்ததுடன் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு பொது உத்தியோகத்தர்கள் என்ற வகையில் உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை எடுப்பதற்கு இணங்கினர். தேர்தல்கள் ஆணையாளரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இ.ம.உ.ஆ ஆனது தேர்தல் கண்காணிப்பு மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள்முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் வழிகளிலும் அவைகளை விசாரிப்பதிலும் தேர்தல் கண்காணிப்பு மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியது.

## 3.3 பேருவளை மற்றும் அளுத்கமவில் மதப் பதற்றம்

பேருவளை மற்றும் அளுத்கம பகுதிகளில் 2014 ஜுன் 15 ஆம் திகதிகளில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம் சனசமூகத்தினருக்கும் இடையில் மதப் பதற்றம் இருந்ததாக அறிக்கையிடப்பட்டது. இந் நிகழ்வானது பௌத்த பிக்கு ஒருவருக்கும் 3 முஸ்லிம் இளைஞருக்கும் இடையிலான ஒரு தகராறில் அவ் இளைஞர்கள் பிக்குவை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு நிகழ்வாக கருதப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து ஒரு பொதுக்கூட்டமானது அந்நிகழ்வின் பதிற்செயற்பாடாக நடைபெற்றதுடன், பொதுபலசேனவின் பொதுச்செயலாளர் வண. கலபொடத்த ஞானசேன தேரர் இனத்துவேசமானதும் எரிவூட்டுவதுமான கூற்றுக்களை செய்திருந்தார்.

இச்சம்பவத்திற்கு அடுத்தநாள் இ.ம.உ.ஆ குழுவானது பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விஜயம் செய்ததுடன் இரு சமூகத்தையும் சேர்ந்த வியாபார இடங்கள் பல எண்ணிக்கையில் எரிக்கப்பட்டிருப்பதையும் அவதானித்தது. அத்துடன் தீயணைப்பு படையினர், பொலிசார் என்போர் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அழைக்கப்பட்டனர். பொலிஸ் ஊடரங்குச் சட்டமானது இரண்டு நாட்களுக்கு மேலாகப் போடப்பட்டு இருந்தது.

இ.ம.உ.ஆ குழுவானது 2014 ஜுன் 17,18 ஆம் திகதிகளில் விஜயங்களைத் தொடர்ந்து இடையீடுகளை மேற்கொண்டதுடன், சனசமூக சமயத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் அரச உத்தியோகத்தர்களைச் சந்தித்தனர்.

இ.ம.உ.ஆ குழுவின் இடைக்கால அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தவிசாளர் மற்றும் ஆணையாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் அவ்விடத்திற்கு விஜயம் மேற்கொண்டதுடன் மாவட்ட செயலாளர், சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமயத் தலைவர்கள், உள்ளூர் அரசியல்வாதிகள் சிரேஷ்ட மட்ட அரசாங்க அதிகாரிகளை சந்தித்ததுடன், இறுதியாக நோன்புக்காலத்தின்பொழுது 2014 ஜுலை 08 இல் பள்ளிவாசலில் பாதிக்கப்பட்ட மக்களின் பெரும் கூட்டத்தினை சந்தித்தனர். ஆணையாளர் அப்பகுதியில் வாழும் சனசமூகங்களுடன் மீளிணக்க நிகழ்ச்சித்திட்டத்தை தொடருவதற்கு தீர்மானித்தார்.

## 3.4 மரணதண்டனை மீதான அறிக்கையை வெளியிடுதல்

உலகம்பூராகவும் மரண தண்டனை அமுல்படுத்தலுக்கு சார்பாகவும் எதிராகவும் இருந்த எண்ணங்களைக் கவனிப்பதற்கு இ.ம.உ.ஆ நடவடிக்கை எடுத்தது. இ.ம.உ.ஆ குற்றவீதங்கள், மரண தண்டனைகள் மற்றும் உலகின் சில கண்டங்களில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அது நிறைவேற்றப்படுதலை அது ஆய்வு செய்தது.

உண்மைகளை ஆராய்ந்த பிற்பாடு இ.ம.உ.ஆ ஆனது சிபார்சுகளை வெளியிட்டதுடன் இ.ம.உ.ஆ தலைமை காரியாலயத்தில் 07.10.2014 அன்று ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்நிகழ்வில் உரிய பங்காண்மையாளர்கள் அழைக்கப்பட்டதுடன் பரந்த ஊடக பிரச்சாரமும் வழங்கப்பட்டு இருந்தது.

## 3.5 விஜயங்கள்

### பொலிஸ் நிலையங்களின் பரிசோதிப்புக்கள்

பொலிஸ் நிலையங்களை ஆணைக்குழு பரிசோதிப்பின் நோக்கமானது சட்டத்திற்கு முரணான கைது மற்றும் சித்திரவதைகளைக் குறைப்பதும் நீதிமன்றங்களில் சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்படுவதின் தாமதங்களைக் குறைப்பதும் ஆகும். பொலிஸ் நிலையங்களின் பரிசோதிப்புகளுக்கு மேலதிகமாக ஆணைக்குழுவானது பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு மற்றும் குற்றபுலனாய்வுத் திணைக்களம் என்பவற்றையும் பரிசோதித்தது. ஆணைக்குழுவானது அவ்வாறான பரிசோதிப்புக்களின் ஊடாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலைமைகள் மற்றும் தடுத்து வைத்திருப்பதால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் என்பவற்றைப் பரிசோதித்ததுடன் தடுப்புக்காவலில் இருக்கும்பொழுதுதான அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. இந்த விதமான பரிசோதிப்புக்களின்பொழுது தடுத்து வைப்போரின் ஆரோக்கியம் தொடர்பான விடயங்கள், உறவினர்களை சந்திப்பது தொடர்பான விடயங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் பொலிஸ்நிலையங்களின் பரசோதிப்பின்பொழுது பல சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டு இருந்தன. அவையாவன தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் தாக்குதல் சம்பவங்கள் மற்றும் உரிய தடுப்புக் கட்டளைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருத்தல் என்பனவாகும். ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளானவர்கள் அவ்வாறான சம்பவங்கள் மீது விசாரணைகளை முன்னெடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தனர்.

ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகம் மற்றும் தலைமைக்காரியாலயம் ஊடாக நாடு பூராகவுமுள்ள 1479 பொலிஸ்நிலையங்களின் பரிசோதிப்புக்களை ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒருமுறையாவது மேற்கொண்டு வந்தது. சிலவேளைகளில் இப் பரிசோதிப்பானது இரவு வேளைகளில் நடாத்தப்பட்டது.

### பயங்கரவாத புலனாய்வுப்பிரிவுக்கான விஜயம்

- மனித உரிமை பாதுகாவலரான றுக்ஷான் பெர்னாண்டோ மற்றும் கத்தோலிக்க மதகுருவாகிய பிரவீன் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலை மற்றும் சட்டபூர்வத்தன்மையை அவதானிப்பதற்காக பயங்கரவாதப் புலனாய்வுப்பிரிவுக்கு 07.03.2014 அன்று விசேட விஜயத்தை ஆணைக்குழுவின் விஷேட உத்தியோகத்தர்கள் மேற்கொண்டனர். அவர்கள் 16.03.2014 அன்று கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டதுடன் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட பின்பு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு சட்ட மருத்துவ உத்தியோகத்தரிடம் கையளித்ததாக இருந்தது. இ.ம.உ.ஆ.இக்கூற்றினை பதிவு செய்து கொண்டதுடன் அவரது உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு அறிவிக்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

  இ.ம.உ.ஆ குழுவினர் பயங்கரவாதப் புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரியைச் சந்தித்து தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் சித்திரவதை செய்யப்படாமல் அல்லது தொந்தரவு செய்யப்படாமல் இருப்பதற்கான உரிமையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறும் அத்துடன் உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் தெரிவித்தனர். மேலும் அவர்களது சட்டத்தரணிகள், உறவினர்கள் அவர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறும் தெரிவித்தனர். இ.ம.உ.ஆ குழுவினர் அவர்களது கைது மற்றும் தடுத்து வைத்திருக்கும் நிலைமைகள் குறித்து உறவினர்களுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

- மலேசியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட மூன்று தடுத்து வைக்கப்பட்டவர்களை தரிசிப்பதற்கு மனித உரிமைகள்கண்காணிப்பகத்தின் இணையத்தள செய்தியை அடிப்படையாகக் கொண்டு அதிகாரபூர்வ நடவடிக்கையை இ.ம.உ.ஆ எடுத்தது. ஆணையாளரின் தலைமையிலான ஒரு குழுவானது விஜயம் மேற்கொண்டு சந்திரலிங்கம் ராஜ்குமார், செல்வதுரை கிருபானந்தன் மற்றும் மகாதேவன் குறுப்பந்தன் எனப்பெயரிடப்பட்ட தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை பார்ப்பதற்காகச் சென்றது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்கள் நல்ல நிலையில் வைத்திருக்கப்படுவதையும், சித்திரவதைக்குட்படாதிருப்பதையும் இ. ம. உ. ஆ. அவதானித்தது. தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் தமக்கு உணவு, உடைகள் மற்றும் தேவையானவைகள் கிடைக்கப்பெற்ற பொழுதிலும் ஏனைய தேவைகள் தேவைப்படுவதாக அறிவித்தனர்.

ஆணைக்குழுவானது அதிகாரிகளுடன் அவர்களுக்கு தேவையானவற்றை வழங்குவதற்கு கலந்துரையாடியது. ஆணைக்குழுவானது அதிகாரிகளுக்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பாதுகாப்பு நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்கும் சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் அழுத்தம் கொடுத்தது.

### தடுப்பு நிலையங்கள்

2014 இல் குழுவினர் மிரிஹானவிலுள்ள வெளிநாட்டவர்களை தடுத்து வைத்திருக்கும் இடத்திற்கு விஜயம் மேற்கொண்டது. மெத்செவன தடுப்பு நிலைய அரச நிலையத்திற்கும் விஜயம் மேற்கொண்டது. ஆணைக்குழுவானது குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கும் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்திற்கும் அங்கு தடுத்து வைத்திருக்கப்பட்டுள்ளவா்களின் தடுப்புக்காவல் நிலைமைகளை தரமுயர்த்துமாறு சிபார்சு செய்தது.

## 3.6 தடுப்புக்காவல் கட்டளைகளைப் பதிவு செய்தல்

இலங்கை மனித உரிமைகள் சட்டத்தின் 28வது பிரிவின் பிரகாரம் 1979 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழோ அல்லது பொதுமக்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 10 இன் கீழ் செய்யப்பட்ட) ஒழுங்குவிதியொன்றின் கீழோ யாரும் ஒருவரை கைது செய்வதற்கு அல்லது தடுத்து வைப்பதற்கு விளைவிக்கும் தடுப்புக்காவல் கட்டளையை விநியோகிக்கும் ஒருவர் அந்த கைது அல்லது தடுப்புக் குறித்து ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டியது அவரின் கடமையாகும். தடுப்புக்கட்டளையினைப் பதிவு செய்வதற்கான ஒரு பதிவுப் புத்தகமானது ஆணைக்குழுவால் வழங்கப்பட்டு பேணப்படுகிறது. குறித்த ஆண்டுக்குள்ளாக ஆணைக்குழுவுக்கு தகவல்கள் அளிக்கப்பட்ட தடுப்பு கட்டளைகளின் எண்ணிக்கை 440 ஆகும். அவற்றில் 373

ஆண்கள் சம்பந்தமானதாகவும், மற்றும் 31 பெண்கள் சம்பந்தமானதாகவும் இருந்தது. அவ்வண்ணமான தடுப்புக் காவல் சம்பந்தமான கட்டளைகள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்கிய பாதுகாப்பு அலகுகள் கீழே தரப்படுகின்றன.

| விபரிப்பு | ஆண் | பெண் |
|---|---|---|
| பயங்கரவாத விசாரணை அலகு | 206 | 16 |
| குற்றப்புலனாய்வுப்பிரிவு | 103 | 13 |
| பொலிஸ்நிலையங்கள் | 38 | 02 |
| போதைப்பொருள் பணியகம் | 16 | - |
| மேலே விதந்துரைக்கப்படாத ஏனையவை | 10 | - |
| **மொத்தம்** | **373** | **31** |

## 3.7 இ.ம.உ..ஆ மீளிணக்க செயன்முறையைக் கண்காணிப்பதும் ஆதரவளிப்பதும்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், என்போருடன் யாழ்ப்பாணம் அமைதிக்கும் நல்லெண்ணத்திற்குமான ஆயர் இல்ல மக்கள் சபையால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவத்தின் பேரில் பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பு செயற்பாடு குறித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது. குறித்த காலப்பகுதிக்குள்ளாக முரண்பாட்டின் நிமித்தமாக காயமடைந்த அல்லது சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்ட ஆட்கள் மீதான தகவல்களை வழங்குவதற்கு பிரதேச செயலாளர்களை வேண்டுகோள் விடுத்து 13.11.2014 திகதியிடப்பட்ட இல HAF-3-LLRC இலக்கத்தைக் கொண்ட பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ஒரு கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இ.ம.உ.ஆ இன் தவிசாளர் அமைதிக்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் சபையின் பிரதிநிதிகளாகிய பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, மற்றும் திரு S பரமானந்தனிடமும் அவர்களது பிரச்சினைகளையும் அவர்களது தேவைகளையும் வேண்டுகோள்களையும் விபரிப்பதற்காக அழைக்கப்பட்டனர். கொடுக்கப்பட்ட வடிவமைப்பின் ஊடாக உண்மையான தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் சேகரிக்க முடியாது என அவர்கள் சுட்டிக்காட்டினர். பகுதியில் வாழாத பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக செயற்பட்ட சேதங்களைப் பார்ப்பதற்கு தமது சொந்த இடங்களுக்குச் சென்றடைய இடமளிக்கப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

மற்றொரு வேண்டுகோள் என்னவெனில் அவர்களின் உறவினர்களானவர்கள் தமது உறவினர்கள் சார்பாக உரிமை கோரல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் இது கிளையற்ற தனிக் குடும்பத்திற்கு வரையறுக்கப்பட முடியாதும் என்பதும் ஆகும். இறுதி வேண்டுகோளானது வெளிநாட்டில் வாழ்பவர்களாகவும் சாட்சியமளிக்கவும், சேதாரங்களை உரிமைகோரவும் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

சொல்லப்பட்ட பிரதிநிதிகளால் எழுப்பப்பட்ட பிரச்சினைகளையும் வேண்டுகோள்களையும் கவனித்த புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த குடித்தொகை மதிப்பீட்டின் இலக்குகளை விளக்கமளித்தார்.

இதன் இலக்கானது உடன்பாட்டின் நிமித்தமாக இறந்த / காயப்பட்ட ஆட்கள் மீதானதும் மற்றும் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாகவும் புள்ளிவிபரங்களை சேகரிப்பது எனவும் இந்தக் கருத்துக் கணிப்பில் முழு புவியியல் எல்லைகள் பரிசீலிப்புக்கு எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் நாட்டுக்கு வெளியே வாழ்ந்தவர்கள் கணக்கில் எடுக்கப்பட முடியாது எனவும், ஆனால் சில வரையறைகளுடன் அவர்களது உறவினர்கள் இப்படிவ வடிவமைப்பின் ஊடாக தகவல்களை வழங்க முடியும். அத்துடன் தடுப்பு நிலையங்களில் வாழ்ந்தவர்களும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளனர் என அவர் எடுத்தியம்பினார்.

மேலும் அவர் இவ் கருத்துக்கணிப்பானது சேதங்களைக் கணிப்பிட்டு அல்லது நட்டஈடுகளைக் கொடுப்பதானது அல்ல எனவும், தரவுகளைச் சேகரிப்பது மாத்திரமே எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இறுதியாக ஆணைக்குழு மக்கள் சபையின் பிரதிநிதிகளிடம் தீர்த்து வைக்கப்படுவதற்காக பிரச்சினைகளையும் ஆலோசனைகளையும் குறிப்பிடும்படி ஒரு வேண்டுகோள் விடுத்தது. அறிக்கையை ஆணையாளருக்கு மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்திற்கு ஒரு பிரதியுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டது.

# அத்தியாயம் 04

## மனித வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவம்

### இ.ம.உ.ஆ பணியாட்டொகுதியினரின் இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மனித உரிமைகள் மற்றும் ஊழலும் பயிற்சிப்பட்டறை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கையின் மனித உரிமைகள் தேசிய நிறுவகம் என்ற வகையில் அரசியலமைப்பால் உத்தரவாதப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளின் மீறுகைகளை அல்லது மீறப்பட இருப்பவைகளை புலனாய்வு செய்து விசாரிக்கும் அதிகாரத்துடனும் அவற்றுக்கான நிவாரணத்தையும் ஆறுதலையும் வழங்கும் முழுமையான அதிகாரத்துடனும் நிறுவப்பட்டது. இலங்கையில் அடிப்படை உரிமைகள் மீறுகைகளுக்கு அப்பால் இ.ம.உ.ஆ இன் வீச்செல்லையை விரிவாக்கும் ஒரு முனைப்பாக மனித உரிமைகள் மற்றும் ஊழல்களுக்கிடையிலான தொடர்பு தொடர்பான பயிற்சிப்பட்டறையானது இலங்கை Transparency International மற்றும் இ.ம.உ.ஆ என்பவற்றினால் கூட்டாக 2014 ஜனவரி 27 மற்றும் 28 களில் ஒழுங்கு செய்யப்பட்டது. இதிலே இ.ம.உ.ஆ இன் தலைமைக்காரியாலயம மற்றும்  பிராந்திய பணியாட்தொகுதியினர் பங்குபற்றியிருந்தனர். துறைசார் நிபுணர்கள் வளவாளர்களாக இப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியிருந்தனர்.

### 4.1.2 உள்ளுர் பயிற்சிகள்

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின வேறுபட்ட வகைப்பாடுகளைச் சேர்ந்த 25 உத்தியோகத்தர்கள் அல்லது பணியாட்தொகுதியினரிற்கு மனிதவள முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் செயலக பழக்கங்கள் தொடர்பாக வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியம் மூலமாக பயிற்சிகள் வழங்கப்பட்டது.

- நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தினால் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக இரு பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

- பொதுப்பொருட் கொள்வனவு மற்றும் அப்புறப்படுத்தல் செயன்முறைகள் மற்றும் நுஆட்சி மற்றும் அடிப்படை தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தலைமைக்காரியாலயம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் பணியாட்தொகுதியினிறகு பயிற்சியளிக்கப்பட்டது.

### 4.1.3 மொழித்திறன்கள்

- ஆங்கில மொழித்திறனை முன்னேற்றிக் கொள்வதற்காக 12 பணியாட்தொகுதியினரிற்கு நிதி ஆதரவு வழங்கப்பட்டது

### 4.1.4 உயர்கல்வி

- மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான துறைகளில் பட்டப்பின் படிப்பிற்காக ஆறு நிறைவேற்று உத்தியோகத்தர்களிற்கு நிதி ரீதியாக ஆதரவு அளிக்கப்பட்டது.

### 4.1.5 சர்வதேச பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள்

- பொதுநலவாய செயலகமானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயலுமை விருத்தி இடையீட்டில் நான்கு நாட்கள் ஆதரவளித்தது. அது ஜெனிவாவில் 2014 மார்ச் 10 – 13 ஆம் திகதி வரை இடம்பெற்றது. தவிசாளர் ஒரு ஆணையாளர்,இ.ம.உ.ஆஇன் சிரேஷ்ட பணியாட்தொகுதி உறுப்பினர்கள் மற்றும் இரண்டு பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய பத்து பங்குபற்றுனர்கள் இந்தக் குழுாமில் உள்ளடங்கியிருந்தனர்.

  இந்த இடையீடானது பொதுநலவாய செயன்முறையின் ஒரு பாகமாக இருந்ததுடன் செயலாளரினால் உருவாக்கப்பட்ட வலைப்பின்னல் இ.ம.உ.ஆதொழிற்பாட்டு சுயாதீனம் மற்றும் அதிகாரத்தை முன்னேற்றுவதற்காக அமைந்தது. இந்த இடையீடானது இ.ம.உ.ஆ க்கு ஏனைய ஏனைய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுடனும் மனித உரிமைகளின் பாதுகாப்பு ஊக்குவிப்பிற்கான தேசிய நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்புக்குழு மற்றும் ஐநா மனித உரிமை பேரவை பங்குபற்றுகை மற்றும் கற்றல்களுடன் வலைப்பின்னல் அமைப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

- ஆசிய பசுபிக் அமைப்பானது இ.ம.உ.ஆ பணியாட்தொகுயினரின் இயலுமை விருத்திக்கு 2014 இல் வேறுபட்ட கருப்பொருள்களின் கீழ் ஆதரவளித்தது.

| | | நாடு மற்றும் மகாநாடு / கருத்தரங்கு / கூட்டம் / பயிற்சிப்பட்டறை | காலப்பகுதி |
|---|---|---|---|
| 01 | நீதிபதி பிறியந்த R P பெரேரா தவிசாளர்<br>கலாநிதி S W P மகாநாமஹேவ ஆணையாளர்<br>திருமதி S J பரணகம செயலாளர்<br>திரு. நிமால் G புஞ்சிஹேவ மேலதிக செயலாளர்<br>Ms சிரானி ராஜபக்ஷ - பணிப்பாளர் - கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்<br>Ms துஷித்த சமரசேகர பணிப்பாளர் - M & R<br>Msசித்தாரா தம்பிலியகொட பதில் பணிப்பாளர் I & I<br>திரு. Tகனகராஜா - பிராந்திய ஒருங்கிணைப்பாளர் யாழ்ப்பாணம்<br>திரு A.Lஇசாடீன் பதில் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் கல்முனை<br>திரு K Kவில்வராஜான் கல்வி உத்தியோகத்தர் | ஜெனிவா சுவிற்சலாந்து<br>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான இயலுமை விருத்தி இடையீடு பொதுநலவாய செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது | 10.03.2014<br>13.10.2014 |
| 02 | திருமதி. T G S D தம்பிலியகொட பணிப்பாளர் (I & I)<br>திரு. H D C அருணகுமார – புலனாய்வு உத்தியோகத்தர் | மாலைதீவு<br><br>ஆசிய பசுபிக் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட வினைத்திறனான ஊடக மற்றும் நிகழ்ச்சித்திட்டம் மீதான மாதிரி மற்றும் APF கலப்பு கற்கைநெறி | 07.04.2014<br><br>10.04.2014 |
| 03 | திரு. M A N சந்திரசிறி – ஆய்வு உத்தியோகத்தர் | அவுஸ்திரேலியா<br>NHRI ஆசிய பசுபிக் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட வயது முதிர்ந்த ஆட்களுக்கான உரிமைகள் மீதான ஆசிய பசுபிக் பயிற்சிப்பட்டறை | 13.05.2014<br>15.05.2014 |
| 04 | திருமதி. S.N லியனகம – விசாரணை உத்தியோகத்தர் | மலேசியா<br>ஆசிய பசுபிக் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட வினைத்திறனான விசாரணைகளைப் பொறுப்பெடுத்தல் மீதான APF மாதிரிப் பிராந்திய பயிற்சிப்பட்டறை | 19.05.2014<br>23.05.2014 |
| 05 | திரு. S A விஜயானந்தா – புலனாய்வு உத்தியோகத்தர் - அனுராதபுரம் | இந்தியா நியுடெல்கி<br>ஆசிய பசுபிக் சபையால்ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்றகரமான மனித உரிமைகள் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 10.06.2014<br>16.06.2014 |
| 06 | திருமதி.S J பரணகம –செயலாளர் | சிரேஷ்ட நிறைவேற்றுனர் வட்டமேசை | 23.6.2014<br>24.06.2014 |

| | | | |
|---|---|---|---|
| 07 | டாக்டர் S W பிரதீபா மகானாமஹேவ ஆணையாளர் திரு N L A கலாம் - புலனாய்வு உத்தியோகத்தர் | மலேசியா<br>தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்காக மத்தியஸ்தம் மற்றும் பேச்சுவார்த்தை பயிற்சி | 11.08.2014<br>15.08.2014 |
| 08 | திரு T E ஆனந்தராஜா – ஆணையாளர் | இந்தியா<br>தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் ஆசிய பசுபிக் சபையின் 19வது ஆண்டுக் கூட்டம் | 03.09.2014<br>05.09.2014 |
| 09 | டாக்டர் S W பிரதீபா மகானாமஹேவ ஆணையாளர் | சீனா<br>மனித உரிமைகள் மீதான 7வது பீஜிங் சபை | 17.09.2014<br>18.09.2014 |
| 10 | திரு C K இராஜசிங்க – வலைப்பின்னல் நிர்வாகஸ்தர் W A U சமன்மாலி விஜேசூரிய – ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் | தேசிய மனித உரிமை நூலகம் மற்றும் தகவல் உரிமை முகாமைத்துவத்தில் NHRI க்கான கலப்பு கற்றல் கற்கைநெறி | 22.09.2014<br>26.09.2014 |
| 11 | Ms. S ராஜபக்ஷ பணிப்பாளர் கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | தாய்லாந்து<br>தேசிய பசுபிக் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட சமூக ஒருங்கிணைப்பு மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வயது முதிர்ந்தோரின்உரிமை மீதான பயிற்சிப்பட்டறை | 30.09.2014<br>02.10.2014 |
| 12 | திரு S J பரணகம செயலாளர் | பங்காளதேஷ்<br>தென்னாசிய மனித உரிமைகள் பொறிமுறை நன்மைகள் மற்றும் சவால்களை நோக்கியது மீதான பிராந்திய மகாநாடு | 17.11.2014<br>18.11.2014 |

## 4.2 செல்வி துவித்த சமரசேகர, பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் மீளாய்வு)

ஆணைக்குழுவானது செல்வி துஷித்த சமரசேகர 2014 இல் பணிப்பாளர் கண்காணிப்பு மற்றும் மீளாய்வின் எதிர்பாராத இறப்பினால் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. இ.ம.உ.ஆ க்கு செல்வி துஷித்தவால் வழங்கப்பட்ட முயற்சி மிக்கதும் பெறுமதிமிக்கதுமான சேவை மற்றும் மனித உரிமைகளின் சேவையாளராக அவர் இந்த நாட்டில் இருந்ததும் பாராட்டப்படக்கூடியதாகும்.

அமரர் செல்வி துஷித்த சமரசேகரவிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலைகள் கடமைகள் அனைத்தையும் பாராட்டுவதுடன் அவா் சந்தேகமற்ற முறையில் அர்ப்பணிப்புடன் ஆணைக்குழுவிற்கு தனது சிறந்த சேவையை வழங்கியிருந்தாா். செல்வி துஷித்தாவால் செய்யப்பட்ட சேவையானது இ.ம.உ.ஆ ஆல் மாத்திரமல்லாமல் ஏனைய சிவில் சமூக சர்வதேச நிறுவனங்களாலும் பாராட்டப்பட்டது.

செல்வி துஷித்த சமரசேகரவின் இழப்பானது உண்மையில் ஆணைக்குழுவிற்கு தாங்க முடியாததாகும். அவா் தனது கடமைகள் தொடர்பாக எடுத்துக்கொண்ட முனைப்புக்கள் உயர் நியமமானதாகும்.

## 4.3 பணிநிலையினர் தகவல் 2014

அமைச்சு : ஜனாதிபதி அலுவலகம்
திணைக்களம் : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
முகவரி இல : 165 கின்சி வீதி கொழும்பு 08 அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினர்
தற்போதுள்ள பணிநிலையினர்

| நிலை | தரம் வகு | சம்பள அளவு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிர | | | நிர | | |
| செயலாளர் | | SL-3-2006 | 1 | - | - | 1 | - | - |
| மேலதிக செயலாளர் | | SL-3-2006 | 1 | - | - | - | - | 1 |
| பிரதிச் செயலாளர் | | SL-1-2006 | - | - | - | 1 | - | - |
| பணிப்பாளர்கள் | I | SL-1-2006 | 5 | - | - | 1 | - | - |
| உதவி /பிரதிப் பணிப்பாளர் | III | SL-1-2006 | 3 | - | - | - | - | - |
| சட்ட உத்தியோகத்தர் | III | SL-1-2006 | 22 | - | - | 11 | - | |
| பிராந்திய ஒருங்கிணைப்பாளர் | III | SL-1-2006 | 11 | - | - | 08 | - | - |
| வலைப்பின்னல் நிர்வாகஸ்தர் | III | SL-1-2006 | 1 | - | - | 1 | - | - |
| கணக்காளர் | III | SL-1-2006 | 1 | - | - | 1 | - | - |
| உள்ளகக் கணக்காய்வாளர் | III | SL -1-2006 | 1 | - | - | 1 | - | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | Supra | MN-7-2006-A | 1 | - | - | - | - | - |
| கணக்கு உத்தியோகத்தர் | Supra | MN-7-2006-A | 1 | - | - | - | - | - |
| உதவி நூலகர் / நூலகர் | Supra | MN-7-2006-A | 2 | - | - | - | - | - |
| சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | | MN-7-2006-A | 3 | - | - | - | - | - |
| பயிற்சி மற்றும் கல்வி உத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 1 | - | - | 1 | - | - |
| ஆய்வு உத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 1 | - | - | 1 | - | - |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | III | MN-4-2006-A | 1 | - | - | - | - | - |
| புலனாய்வு உத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 47 | - | | 31 | - | - |
| சட்ட உதவியாளர் | III | MN-4-2006-A | 14 | - | - | - | - | - |
| புலனாய்வு உதவியாளர் | III | MN-4-2006-A | 14 | - | - | - | - | - |
| நிதி உதவியாளர் | III | MN-4-2006-A | 1 | - | - | 2 | - | - |
| நூலக மற்றும்ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 1 | - | - | 1 | - | - |
| மொழிபெயர்ப்பாளர் | III | MN-4-2006-A | 2 | - | - | - | - | - |
| வன்பொருள் மென்பொருள் தொழில்நுட்பவியலாளர் | III | MT-1-2006-A | 2 | - | - | - | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்றது) | III | MT-1-2006-A | 70 | - | - | 55 | - | - |
| சாரதி | III | PL-3-2006-A | 22 | - | - | 15 | - | - |
| அலுவலக உதவியாளர் | III | PL-1-2006-A | 31 | - | - | 26 | - | - |
| காவலாளி | III | PL-1-2006-A | 11 | - | - | 10 | - | - |
| தொழிலாளி | III | PL-1-2006-A | 2 | - | - | 2 | - | - |
| **மொத்தம்** | | | 273 | - | - | 169 | - | 1 |

4.4 2014 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்று

2014 ஆம் ஆண்டுக்கான செலவினக்கூற்று

**அமைச்சின்பெயர் / திணைக்களம் / மாவட்ட செயலகம்: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**செலவினத் தலைப்பு இல 013**

| | | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|---|
| விடய குறியீடு | விபரிப்பு | வரவு செலவு திட்ட மதிப்பீடு களுக்கான ஏற்பாடு | குறை நிரப்பு ஏற்பாடுகள் | குசு 66 மற்றும் 69 அடிப்படை மாற்றங்கள் | மொத்த நிகர ஏற்பாடுகள் | மொத்த சேலவினம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | மீண்டெழும் | | | | | |
| | தனிப்பட்ட உபகாரங்கள் | | | | | |
| 1001 | சம்பளங்கள் ஊதியங்கள் | 45,000,000 | | 350,000 | 45,350,000 | 44,215,684 |
| 1002 | மேலதிகநேர கொடுப்பனவு மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 2,000,000 | | -230,000 | 1,770,000 | 1,600,436 |
| 1003 | ஏனைய உதவுதொகை | 34,000,000 | | 850,000 | 34,850,000 | 34,683,881 |
| | | | | | | |
| | பிரயாண செலவினங்களை | | | | | |
| 1101 | உள்நாடு | 800,000 | | -200,000 | 600,000 | 484,071 |
| 1102 | வெளிநாடு | 1,000,000 | | -725,000 | 275,000 | 273,610 |
| | வழங்கல்கள் | | | | | |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்படுகள் | 1,800,000 | | | 1,800,000 | 1,799,590 |
| 1202 | எரிபொருள் | 4,000,000 | | -200,000 | 3,800,000 | 3,679,432 |
| 1205 | நுகரக்கூடிய பொருள் | 250,000 | | | 250,000 | 202,569 |
| | | | | | | |
| | பேணுகை செலவினம் | | | | | |
| 1301 | வாகனங்கள் | 2,250,000 | | 700,000 | 2,950,000 | 2,895,957 |
| 1302 | இயந்திரம் இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 700,000 | | | 700,000 | 594,699 |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 150,000 | | | 150,000 | 62,854 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **சேவைகள்** | | | | | |
| 1401 | போக்குவரத்து மற்றும் வாகன வாடகை | 3,800,000 | | -300,000 | 3,500,000 | 3,433,345 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 3,500,000 | | -200,000 | 3,300,000 | 3,093,392 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 9,000,000 | | | 9,000,000 | 8,574,765 |
| 1404 | வாடகை மற்றும் உள்ளூர் வரிகள் | 36,500,000 | | | 36,500,000 | 26,919,539 |
| 1405 | ஏனையவை | 5,500,000 | | | 5,500,000 | 5,155,019 |
| | | | | | | |
| | **மாற்றுகைகள்** | | | | | |
| 1505 | சந்தா மற்றும் பங்களிப்பு கட்டணங்கள் | 250,000 | | -45,000 | 205,000 | 204,298 |
| | உப மொத்தம் (மீண்டெழும்) | 150,500,000 | 0 | 0 | 150,500,000 | 137,873,141 |
| | | | | | | |
| | ***மூலதனம்*** | | | | | |
| | புனர்வாழ்வு மற்றும் ஐஅி முதலீட்டு சொத்துக்கள் | | | | | |
| 2001 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 500,000 | | | 500,000 | 220,809 |
| 2002 | இயந்திரம் இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணம் | 100,000 | | | 100>000 | 47,022 |
| | | | | | | |
| | மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் | | | | | |
| 2101 | வாகனங்கள் | 6,500,000 | | | 6,500,000 | 5,654,923 |
| | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணம் | 3,000,000 | | | 3,000,000 | 2,196,424 |
| 2103 | இயந்திரம் இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணம் | 150,000 | | | 150,000 | 74,620 |
| | | | | | | |
| | **இயலுமையைக் கட்டியெழுப்புதல்** | | | | | |
| 2401 | பணியாட்தொகுதியினர் பயிற்சி | 3,000,000 | | | 3,000,000 | 2,925,010 |
| | மனித உரிமை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | | | | | |
| 2502(11) | முதலீடுகள் | 5,000,000 | | | 5,000,000 | 4,612,192 |
| | | | | | | |
| | மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஆதரவு | | | | | |
| 2502(13) | முதலீடுகள் | 22,500,000 | | | 22,500,000 | |
| | உபமொத்தம் (மூலதனம்) | 40,750,000 | 0 | 0 | 40,750,000 | 15,731,000 |
| | | | | | | |
| | கூட்டு மொத்தம் | 191,250,000 | 0 | 0 | 191,250,000 | 153,604,141 |

# அத்தியாயம் 05

# இ.ம.உ.ஆ பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடுகள்

## 5.1 அறிமுகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளை மேற்கொண்டு செல்லும் நோக்கத்திற்காக தலைமைச் செயலகத்திற்கு மேலதிகமாக 10 பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிராந்திய அலுவலகமும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அலுவலக வளாக கட்டிடம் ஒன்றையும், பிராந்திய அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒரு வாகனத்தையும் பிராந்திய செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக ஒரு பிராந்திய ஒருங்கிணைப்பாளரையும், மற்றும் பணியாட்தொகுயினரையும் கொண்டுள்ளது. இந்த பிராந்திய அலுவலகங்களின் பணியாளரானவர்கள் ஆணைக்குழுவின் நிரந்தரப் பணியாளர்களாக இருப்பதுடன் பிராந்திய அலுவலகங்களானவை வெளிநாட்டு நிதியீட்டக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படும்பொழுது அவைகள் கருத்திட்ட அலுவலகங்களையும் உள்ளடக்குகின்றன.

10 பிராந்திய அலுவலகங்களில் 06 பிராந்திய அலுவலகங்களானவை வடக்கு கிழக்கில் அமைந்துள்ளன. அதாவது யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, கல்முனை, அம்பாறை மற்றும் ஏனைய 04 அலுவலகங்களும் வடமத்தி, மத்தி, ஊவா மற்றும் தென் மாகாணங்களாகிய அனுராதபுரம், கண்டி, பதுளை, மாத்தறையில் அமைந்துள்ளன. பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைச் செயலகத்தால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சமூகமளிப்பதுடன் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களின் நிகழ்ச்சித்திட்டம், கூட்டங்களின் முடிவடைந்ததும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பணியாட்தொகுதியினருடன் பங்குபற்றுகையில் ஈடுபடுகின்றனர். அம்பாறை பிராந்திய அலுவலகமானது 2014 இல் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது. இந்தப் பிராந்திய அலுவலகமானது ஒக்ஸ்பாம் அவுஸ்திரேலியா என்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. இவ்வளாகம் ஒரு அலுவலகம் மற்றும் பயிற்சி நிலையத்தையும் உள்ளடங்கியுள்ளது. இந்தக் கட்டிடத்தை கொடைவழங்குவதில் ஒகஸ்பாமுக்கு இருந்த அதனது வள்ளன்மைக்காக இ.ம.உ.ஆ நன்றி தெரிவிக்கிறது. சில பிராந்திய அலுவலகங்கள் 2014 இல் நடமாடும் அலுவலகங்களை வேறுபட்ட அமைவிடங்களில் வாரத்திற்கு ஒரு தடவை செயற்படுத்தின.

அனுராதபுர பிராந்திய அலுவலகமானது பொலநறுவையில் நடமாடும் அலுவலகத்தை செயற்படுத்தியது. கண்டிப் பிராந்திய அலுவலகமானது நுவரெலியாவில் செயற்படுத்தியது. வவுனியா பிராந்திய அலவலகமானது முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் நடமாடும் அலுவலகத்தை செயற்படுத்தியது. மற்றும் யாழ்ப்பாணமானது நடமாடும் அலுவலகத்தை கிளிநொச்சியில் நடத்தியது. திலைமைக்காரியாலயமானது புத்தளத்தில் நடமாடும் அலுவலகத்தை செயற்படுத்தியது.

பிராந்திய நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் வகைப்படுத்தலானது அட்டவணை 1இலும் மற்றும் மனித உரிமைகள் ஊக்குவிப்பு செயற்பாடுகள் மீதான நிகழ்ச்சித்திட்டங்கள் அட்டவணை 2 இலும் உள்ளன.

பிராந்திய அலுவலகங்கள் அப்பிராந்தியங்களுக்குள்ளாக பல்வேறுபட்ட இலக்கு குழுக்களை இலக்கு வைத்தது நடாத்தியதுடன் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியிருந்தன.

### பிராந்திய அலுவலகங்கள்

### முறைப்பாட்டு வகைப்பாடு – 2014

| முறைப்பாட்டு வகைப்பாடு | | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சித்திரவதை | தாக்குதல்கள் | 6 | 53 | 10 | - | 9 | 2 | 28 | 28 | 2 | 21 |
| தொந்தரவு | அச்சுறுத்தல்கள் | 4 | 16 | 10 | 10 | 60 | 41 | 51 | 48 | 1 | 2 |
| | கீழ்த்தரமான நடத்துகைகள் | - | 29 | - | - | - | - | - | - | - | - |
| | உடல் உள தொந்தரவுகள் | - | 6 | - | - | - | - | - | - | 11 | - |
| கைது / தடுத்து வைப்பு | சட்டத்திற்கு மாறான கைதுகள் | 10 | 63 | 3 | 51 | 35 | 4 | 47 | 44 | 16 | 47 |
| | சட்டத்திற்கு மாறான தடுத்து வைப்பு | - | 3 | - | - | - | - | - | - | - | - |
| காணாமற்போன ஆட்கள் | | - | 4 | 1 | 4 | 9 | 1 | - | 1 | 3 | 37 |
| தடுத்து வைப்பின்பொழுது இறப்பு | | - | - | 1 | - | - | - | - | - | - | - |
| செயற்பாடின்மைகள் முறைப்பாடுகள் | | 24 | 163 | 37 | 128 | 87 | 54 | 297 | 86 | 36 | 21 |
| வேலைவாய்ப்புக்கள் | ஆட்சேர்ப்புக்கள் | 5 | 13 | 66 | 26 | 29 | 56 | 34 | 128 | 4 | 35 |
| | பதவி உயர்வுகள் | 2 | 24 | - | - | - | - | 54 | - | 4 | - |
| | இடமாற்றங்கள் | 5 | 28 | - | - | - | - | 22 | - | 2 | - |
| | பதவி இடைநிறுத்தல் | 7 | 57 | - | - | - | - | 23 | -- | 2 | |
| | விஸ்தரிப்புக்கள் | - | 13 | - | - | - | - | - | - | - | |
| | சம்பளம் | 5 | 12 | - | - | - | - | - | - | 2 | - |
| | சேவை நிபந்தனைகள் | 4 | 1 | - | - | - | - | - | - | - | - |
| | ஊ.சேநி.ஊ.ந.நி | 2 | 2 | - | - | - | - | - | - | - | - |
| | விசேட நன்மைகள் | - | 8 | - | - | - | - | - | -- | 3 | - |
| ஓய்வூதியம் | | 2 | 15 | - | - | - | | 13 | | 1 | |
| கல்வி | பாடசாலை அனுமதிகள் | 2 | 11 | 26 | 47 | 7 | 11 | 76 | 87 | - | 11 |
| | அரச ஆவணங்களில் அனுமதிபெறல் | - | 1 | - | - | | | | | 3 | |
| | ஒழுக்காற்று விடயங்கள் மாணவர்கள் | - | 3 | - | - | | | 4 | - | - | - |
| சுகாதாரம் | மருத்துவ கவனயீனங்கள் | 3 | 1 | 5 | 4 | - | 4 | 1 | 3 | - | - |
| சொத்து | காணி விடயங்கள் | 26 | 174 | 88 | 41 | 28 | 33 | 44 | 145 | 15 | 48 |
| | வீதி | 1 | 13 | - | - | - | - | - | - | - | - |
| | நீர் | 1 | 3 | - | - | - | - | - | - | - | - |
| | வீடமைப்பு | 3 | 1 | - | - | - | - | - | - | - | - |
| | சுவிகரிக்கப்பட்டமைக்கான நட்டஈடுகள் | 1 | 9 | | - | - | - | - | - | - | - |
| | மின்சாரம் | - | 7 | - | - | -- | - | - | - | - | - |
| | விவசாயிகள் விடயங்கள் | - | 3 | - | - | - | - | - | - | - | - |
| அரச நலனோம்பல் | சமுர்த்தி | 5 | - | - | 12 | 5 | 4 | 7 | 1 | - | 26 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உர மானியம் | - | 1 | - | - | - | - | - | - | | |
| சுற்றாடல் | மண் வெட்டல் | - | - | - | - | - | - | - | - | 1 | - |
| | காணி மீட்டல் | 11 | - | 19 | 53 | 17 | 16 | 2 | 24 | 14 | 57 |
| சிறுவர் விடயங்கள் | . | | | | 1 | | 6 | - | 3 | - | 1 |
| பெண்கள் விடயங்கள் | | - | - | - | 2 | | - | - | 1 | - | 3 |
| ஏனையவை | | 11 | - | 19 | 53 | 17 | 16 | 2 | 24 | 14 | 57 |
| எமது ஆணைக்குட்படாதவைகள் | | - | 12 | 30 | 34 | - | 7 | 191 | - | 5 | - |
| மொத்தம் | | **129** | **749** | **286** | **424** | **288** | **239** | **910** | **616** | **127** | **342** |

## 2014 இல் பிராந்திய அலுவலகங்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| | பிராந்தியம் | விழிப்புணர்வு, ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | சிவில் சமூக கூட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | அம்பாறை | 39 | 2 |
| 02 | அனுராதபுரம் | 42 | 04 |
| 03 | பதுளை | 13 | |
| 05 | மட்டக்களப்பு | 44 | 02 |
| 06 | யாழ்ப்பாணம் | 17 | 02 |
| 07 | கண்டி | 49 | - |
| 08 | மாத்தறை | 26 | 02 |
| 09 | திருகோணமலை | 16 | 02 |
| 10 | வவுனியா | 20 | 02 |

# அத்தியாயம் 06

## உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான உறவுமுறைகள்

### பொதுநலவாய செயலகம்

2012 செப்ரெம்பர் 2013 பெப்ரவரியில் செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான வருகையானது நாட்டிற்கு பொதுநலவாய வலைப்பின்னல் இலங்கைக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை தேடி ஆராய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. செயலாளர் நாயகம் தனது திணைக்களக் கூற்றில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கான எதிர்கால தொழில்நுட்ப உதவிகளின் சில விடயப்பரப்புக்களை இனம் கண்டு இருந்தார்.

2013 இல் தவிசாளர் மற்றும் தூதுக்குழுவினர் இலண்டனில் இடம்பெற்ற மீளிணக்கம் மீதான பொதுநலவாய வட்டமேசை மகாநாட்டில் பங்குபற்றியிருந்தனர். இ.ம.உ.ஆ மீளிணக்கம் மீதான பொதுநலவாய மகாநாட்டின் பங்குபற்றுகையைத் தொடர்ந்து பொதுநலவாய செயலகமானது அதேவருடத்தில் பொதுநலவாய வட்டமேசை மகாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தது. இந்த இடையீட்டின் இலக்கானது தேசிய மீளிணக்க முயற்சிகளில் சொந்த வகிபங்கை தீர்மானிப்பதற்குஇ.ம.உ.ஆக்கு உதவுவதாகும். இந்த வட்டமேசையானது சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் மதத் தலைவர்களின் பங்குபற்றுகையை உள்ளடக்கியிருந்ததுடன் பிராந்தியத்தில் மீளிணக்க முயற்சிகளில் ஈடுபட்டு இருந்தது. 2014 மே மாதத்தில் பொதுநலவாய செயலகமானது ஒரு செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செயலகப்பங்காண்மையின் இலக்கானது தேசிய மீளிணக்கத்தை ஊக்குவிப்பதில் ஒரு திட்டமான வகிபங்கை ஆற்றுவதற்கு இ.ம.உ.ஆஇன் வேலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் ஒரு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதாக இருந்தது.

கொழும்பில் 2014 ஒக்ரோபர் 24 ஆம் திகதி இடம்பெற்ற இ.ம.உ.ஆ உடனான பங்காண்மையுடன் கூடிய பொதுநலவாய செயலகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்ட செல்லுபடியாக்கல் கூட்டமொன்றில் மீளிணக்க செயற்திட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்டது.

தவிசாளர், ஆணையாளர்கள், சிரேஷ்ட பணியாட்தொகுதியினர் மற்றும் பிராந்திய பணியாட்தொகுதியினர் உட்பட்ட 40 பங்குபற்றுனர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். மீளிணக்க செயற்திட்டத்தின் இறுதி வரைபானது இ.ம.உ.ஆஇன் தவிசாளரால் பொதுநலவாய செயலாளர் நாயகத்திற்கு 2014 ஒக்ரோபர் 28 ஆம் திகதி கொழும்பில் ஆணைக்குழுவுடனான செயலாளர் நாயகத்தின் கூட்டத்தின்பொழுது சமர்ப்பிக்கப்பட்டது.

### அமெரிக்க ஐக்கிய நிலையத்தின் நாட்டுக்கான நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளருடனான சந்திப்பு

31.01.14 அன்று இ.ம.உ.ஆ இல் அமெரிக்க ஐக்கிய நிலையத்தின் நாட்டு நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளருடன் வருகைதந்த மாலைதீவு தூதுக்குழுவுடனும் ஒரு கூட்டமொன்று நடாத்தப்பட்டது. கலந்துரையாடலின் முக்கிய விடயங்களானவை இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் புலம்பெயர்வு மீதான சிறந்த ஒழுங்குவிதிகளுக்காக இரண்டு நாடுகளுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போன்ற நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு முனைப்பை ஊக்குவிப்பதாகும்.

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை ஊக்குவிப்பதற்கு அமெரிக்க ஐக்கிய நிலையத்தால் எடுக்கப்பட்ட

முயற்சிகளை பாராட்டியதுடன் மாலைதீவு உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு இணங்கியது.

**மனிதநேய ஒத்துழைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான பணிப்பாளர் நாயகம் -** ரஷ்ய ஸ்தாபனம்

ரஷ்ய ஸ்தாபனத்தின் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் மனிதநேய ஒத்துழைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான பணிப்பாளர் நாயகம் திரு Anatoby Victorov ஆணைக்குழுவுடன் 12.02.2014அன்று ஒரு கூட்டத்தில் ஈடுபட்டிருந்தார். கலந்துரையாடலின் கவனக்குவிப்பானது யாழ்ப்பாணத்திற்கான அவரது விஜயம் குறித்ததாகவும் அதனைத் தொடர்ந்து அவதானிப்புக்கள் மற்றும் சிபார்சுகள் தொடர்பானதாகவும் இருந்தது.

**சுவிற்சலாந்து பிரதிநிதியுடனான கூட்டம்**

திரு. David Vigrati, சுவிற்சலாந்து தூதரகத்திடமிருந்தான முதலாவது செயலாளர் (அரசியல்) மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு 04.03.2014 ஆணைக்குழுவை சந்தித்தது.

**ICC தவிசாளருடனான கூட்டம்**

வழக்குரைஞர் திரு Mabedle Lourence Muswana மனித உரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான தேசிய நிறுவனத்தின் சர்வதேச ஒருங்கிணைப்புக்குழுவின் (ICC) தவிசாளர் மற்றும் தென்னாபிரிக்க மனித உரிமை ஆணைக்குழுவின் தவிசாளர் இ.ம.உ.ஆஇன் தவிசாளரை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தரமுயர்த்துவது மீதான கலந்துரையாடல் செய்வதற்கு 20.05.2014 இல் சந்தித்தனர்.

**வெளிநாட்டு விவகாரங்கள் டச்சு அமைச்சின் உத்தியோகத்தருடனான கூட்டம்**

வெளிநாட்டு அலுவல்கள் டசச்ு அமைச்சின் உத்தியோகத்தரை ஆணைக்குழுவானது 20.05.2014 அன்று சந்தித்தது. தூதுக்குழுவானது குடிவரவு மற்றும் புகலிடக் கோரிக்கைகள் தொடர்பாக இலங்கையின் நிலைமை தொடர்பான கருத்துக்களைக் கேட்பதற்கு விரும்பியது. வெளிநாட்டு விவகாரங்கள் டச்சு அமைச்சானது குடிவரவு மற்றும் புகலிடக்கோரிக்கை தொடர்பானவற்றில் இலங்கையின் அரசியல் சூழமைவு குறித்து ஒரு பரிட்சிப்பை ஆரம்பித்து இருந்தது.

**புலம்பெயர்வு தொழிலாளர்கள் மீதான ஐநா விசேட அறிக்கையிடலாளருடனான கூட்டம்**

ஆணைக்குழுவானது 21.05.2014 அன்று புலம்பெயர் தொழிலாளர்களின் மனித உரிமைகள் மீதான ஐநா விசேட அறிக்கையிடலாளருடன் ஒரு விசேட கூட்டத்தை நடத்தியது. இந்த விசேட அறிக்கையிடலாளரின் விஜயத்தின் நோக்கமானது இலங்கையில் வெளிநாட்டில் வேலைக்காக புலம்பெயர்தல் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் தொடர்புடைய கைக்கொள்கைகள் தொடர்பாக மதிப்பீடு செய்வதாக இருந்தது. விசேட அறிக்கையிடலாளரானவர் புலம்பெயர்தொழிலாளர்களுடன் இ.ம.உ.ஆ தொடர்புடைய வேலைகள் குறித்து கலந்துரையாடினார்.

**பலஸ்தீனிய சுயாதீன ஆணைக்குழு**

பலஸ்தீனிய பொதுமக்களுக்கு எதிரான கொடூரமான இஸ்ரேல் இராணுவ அடக்குமுறையை நிறுத்தும் படியும் காசாத் துண்டிலுள்ள அவர்களது சொத்துக்கள் மீதானவைகளை நிறுத்தும்படியும் தமது அரசாங்கங்களுடன் இடையிடும்படியும் உடனடி நடவடிக்கை எடுக்கும்படியும் எல்லா தேசிய மனித உரிமை நிறுவனங்களுக்கு அழைப்பு விடுவதற்காக மனித உரிமைகளுக்காக பலஸ்தீனிய சுயாதீன ஆணைக்குழுவிடமிருந்தான ஒரு எழுதப்பட்ட தொடர்பாடலை ஆணைக்குழு பெற்றுக்கொண்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது உடனடியாக இதனை அரச தலைவர் என்ற வகையில் இலங்கையின் ஜனாதிபதிக்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காகவும் இராஜதந்திர வழிகள் ஊடாக பலஸ்தீன விடயத்தைக் கவனிப்பதற்காகவும் ஜனாதிபதி அவர்களுக்கு ஆற்றுப்படுத்தியது.

### இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பு

17.01.2014 அன்று ஜனாதிபதியைச் சந்தித்து பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடியது

- 2011 -2016 மனித உரிமைகள் மீதான தேசிய திட்டம்
- பொதுநலவாய செயலகத்துடனான வேலை
- 165 கின்சி வீதி, கொழும்பு 08 இல் இ.ம.உ.ஆ தலைமைக் காரியலயத்திற்கான புதிய கட்டிடத்தை சுவிகரித்தல்
- பிராந்திய அலுவலகங்களை நிறுவிக்கொள்ளுதல்
- 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் உத்தேச திருத்தம் கணக்காய்வாளர் நாயகத்துடனான சந்திப்பு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் 10.01.14 அன்றும் 04.07.14 அன்றும் பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்தை சந்தித்து கணக்காய்வு விசாரணைகள் குறித்துக் கலந்துரையாடினர். மேலும் உரிய நேரத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தை அவர்கள் சுட்டிக்காட்டியதுடன் அது உரிய நேரத்தில் ஆணைக்குழுவானது வருடாந்த அறிக்கையை வெளியிட முடியாமையினால் ஆணைக்குழுவிற்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

### தேர்தல்கள் ஆணையாருடனான கூட்டம்

ஆணைக்குழுவானது 2014 இன்பொழுது தேர்தல்கள் தொடர்பாக மனித உரிமைச் செயற்பாடுகளில்ஈடுபட்டது. தேர்தல்கள் ஆணையாளருடனா முதலாவது கூட்டமானது 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

### நீதியமைச்சின் செயலாளருடனான கூட்டம்

ஆணைக்குழுவானது 21.04.2014 அன்றுஇ.ம.உ.ஆ இன் 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம் தொடர்பாக நீதியமைச்சின் செயலாளருடன் ஒரு கூட்டத்தை நடத்தியது.

வடக்கு கிழக்கில் வாழும் ஆட்களின் குற்றம் சாட்டப்பட்ட ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போதலை விசாரிப்பதற்கான விசாரணைக்குழுவின் செயலாளருடனான கூட்டம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர், சட்ட செயலாளர் மற்றும் பதில் பணிப்பாளர் (விசாரணைகள் மற்றும் புலனாய்வு) வடக்கு கிழக்கில் வாழும் ஆட்களின் குற்றம் சாட்டப்பட்ட ஆட்கள் கடத்தல் மற்றும் காணாமற்போகைகளை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் 22.07.2014 அன்று இ.ம.உ.ஆ இல் சந்தித்தது.

பின்வரும் பிரச்சனைகள் கலந்துரையாடப்பட்டு இணக்கத்திற்கு வரப்பட்டது.

ஒரு ஆணைக்குழுவின் ஆணையின் பிரகாரம் இரு ஆணைக்குழுவாலும் பெற்றுக்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு ஆற்றுப்படுத்தல் பொறிமுறைகளை விருத்தி செய்தல்.

இரு ஆணைக்குழுக்களினதும் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுடன் ஒரு கூட்டத்தை நிபுணத்துவ அறிவை கலந்துரையாடுவதற்கும் நிபுணத்துவ அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் அல்லது மனிதநேய சட்டங்கள் சர்வதேச மனித உரிமைச்சட்டப் பிரச்சினைகளில் பணியாற்றுவதற்கு ஒரு வலைப்பின்னலைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் கலந்துரையாடுவதற்கு ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தல்

09 ஒக்ரோபர் 2014 ஆம் திகதி வடக்கில் கிழக்கில் வாழும் ஆட்களின் குற்றம்சாட்டப்பட்ட ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போகைகளை விசாரிப்பதற்கான தவிசாளரிடம் ஒரு கூட்டம் இடம்பெற்றது.

இ.ம.உ.ஆஇன் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள் ஊடாக ஆணைக்குழுவானது அவர்களின் விசாரணைகளில் காணாமற்போனவர்களோடு ஒத்துழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

### பொலிஸ்மா அதிபருடனான சந்திப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 24.07.2014 அன்று இ.ம.உ.ஆ.இல் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்தது. பொலிஸ்மா அதிபருடன் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக அல்லது பொலிஸ் திணைக்களத்திற்கு எதிராக ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எல்லா சிபார்சுகளின் அமுல்படுத்தாமை தொடர்பானவைகள் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட வேண்டும். எதிர்காலத்தில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிரான எந்த சிபார்சும் உடனடிக் கவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இ.ம.உ.ஆ உடனடி அழைப்புக்கு பதிலளித்தல் தொடர்பாக ஒத்துழைத்தல் விடயத்தில் பொலிஸ்மா அதிபர் இ.ம.உ.ஆ இடம் உடனடி அழைப்பு தொடர்பான ஒவ்வொரு கடமையிலும் ஈடுபடும் புலனாய்வு அதிகாரிகளின் ஒரு புதிய பெயர் நிரலை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள் விடுத்தார். இவ்விடயத்தில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இதிலிருந்து பொலிஸ்நிலையங்களுக்கு அறிவுறுத்தல்களை விடுப்பதற்கு பொலிஸ்மா அதிபர் பொறுப்பெடுத்தார்.

மனித உரிமைகள் களத்தின் சில விடயங்கள் மற்றும் தேவையானவைகளை விளக்கம் செய்வதற்கும் இ.ம.உ.ஆ வளவாளருக்கும் பொலிஸ்திணைக்கள பயிற்றுவிப்பாளர்களுக்கும் வட்டமேசைக் கலந்துரையாடலை நடத்துவதற்கு பொலிஸ்மா அதிபரும் இ.ம.உ.ஆ உம் இணங்கிக் கொண்டனர்.

ஆணைக்குழுவானது பொலிஸ்மா அதிபரிடம் தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் தற்போதுள்ள எல்லா பொலிஸ் கட்டளைகள் மற்றும் சுற்றுநிருபங்களை மீளாய்வு செய்வதற்கும் கைது மற்றும் தடுத்து வைத்தலின்பொழுதும் போதிய பாதுகாப்புக்களை வழங்கும் செயன்முறைகளைத் திருத்துவதற்கும் வேண்டுகோள் விடுத்தது.

### பிராந்திய நிலையங்களால் அறிக்கையிடப்பட்ட பின்வரும் விடயங்களை ஆணைக்குழு எடுத்துக்காட்டியது

- மட்டக்களப்பு கல்முனையில் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் சிங்கள மொழியில் மாத்திரம் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

- பொத்துவில் பொலிஸ்நிலையத்திலும் மத்திய முகாமிலும் தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாமை

- மனுதாரர்கள் தமிழர்களாக இருக்கும்பொழுது பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியில் அறிக்கைகளை அனுப்புவதை தடை செய்தல் இலங்கையின் மொழிக்கொள்கையானது கலந்துரையாடப்பட்டதுடன் பொலிஸ்மா அதிபர் மேற்படி விடயங்களுக்கு கவனம் எடுக்க இணங்கிக்கொண்டார்.

- நெல்லியடி பொலிஸ்நிலையத்தின் மறியல்கூட வசதிகளை முன்னேற்றுவதற்கு இணங்கப்பட்டது.

- பூநகரி, நாச்சிக்குடா, முழங்காவில், பொலிஸ்நிலையங்களில் பெண்கள் சிறுவர்கள் கருமபீடத்தை நிறுவுவதற்கு பொலிஸ்மா அதிபர் பொறுப்பெடுத்தார். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன், தர்மபுரத்தில் பொலிஸ் காவல் நிலையங்களை பொலிஸ்நிலையங்களாக மாற்றுவதற்கும் இணங்கினார். இந்த இலக்குகளை சாதித்துக்கொள்வதற்கு தேவைப்படும் இடங்களில் இருந்து நிதி மூலங்களை பெற்றுக்கொள்வதற்கு சிறிது காலம் எடுக்கும் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். இந்தக் கருத்திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதற்கு சர்வதேச நிறுவனங்களை ஆணைக்குழு சிபார்சு செய்ய முடியுமாக இருந்தால் அது உதவியாக இருக்குமென பொலிஸ்மா அதிபர் ஆலோசனை தெரிவித்தார்.

ஆட்சேர்ப்புக்கு தமிழ்பேசும் சனசமூகத்திடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதில் தட்டுப்பாடு இருப்பதை தெரிவித்த பொலிஸ்மா அதிபர் சிவில்சமூக நிறுவனங்களின் ஊடாக ஆணைக்குழு அவர்களைத் தூண்ட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

பேருவளை அளுத்கம சம்பவங்களின் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பொலிஸ்மா அதிபருடன்

கலந்துரையாடப்பட்டது. ஊடரங்குச் சட்டத்தின்பொழுது பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெரும் பங்காற்றியிருந்தமையானது இந்தக் கலந்துரையாடலின்பொழுது மீளாய்வு செய்யப்பட்டது.

### அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் / பதிவாளர், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுடனான கூட்டம்

சிவில் சமூக நிறுவனங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திய சுற்றுநிருபத்தை விநியோகித்ததன் பின்புலம், காரணங்கள் தொடர்பாக பதிவாளரை ஆணைக்குழு விசாரித்தது. 1980 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்கத்தின் (பதிவும், மேற்பார்வையும்) கீழ் பதிவு செய்யப்பட்டதன்னார்வ சமூக சேவை நிறுவனங்களுக்கு மாத்திரமே சொல்லப்பட்ட சுற்றுநிருபம் பிரயோகிக்கப்படக்கூடியது என பணிப்பாளர் / பதிவாளர் குறிப்பிட்டார்.

அது அவ்வாறான நிறுவனங்களுக்கு மாத்திரமே அனுப்பி வைக்கப்பட்டது எனவும் ஏனைய பொருத்தமற்றவர்களுக்கு அல்ல எனவும் அழுத்தியுரைத்தார். அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படும்பொழுது செயலகமானது நாட்டின் அரசியலமைப்பாகிய அடிப்படைச் சட்டத்திற்குள்ளாக செயற்பட வேண்டுமென ஆணைக்குழு மதியுரை வழங்கியது.

அரசியலமைப்பின் 14 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும் அவருக்கு மேலும் மதியுரை வழங்கப்பட்டது. கூட்டமானது 2014 ஆகஸ்ட் 14 ஆம் திகதி இடம்பெற்றது.

### உரிமைகளுக்கான பாதை மன்றத்துடனான கூட்டம்

உரிமைகளுக்கான பாதை மன்றத்துடன் 03.04.2014 அன்று அம் மன்றமானது 2014 இளைஞர் மற்றும் மனித உரிமைகள் மீதான தென்னாசிய உச்சி மகாநாட்டில் தலைமை ஏற்போராக இருப்பதினால் அவர்களுக்கு இளைஞர் மற்றும் மனித உரிமைகள் மீதான உச்சிமகாநாட்டை வெற்றிகரமாக்கச் செய்வதற்கு உதவுவதற்காக ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. இ.ம.உ.ஆஇன் செயலாளர் கொழும்பில் 25 – 27 ஆம் திகதியில் கொழும்பில் நடத்தப்பட்ட உச்சி மகாநாட்டிற்கான ஒரு பேச்சாளராக கலந்துகொண்டார்.

### குடும்ப புனர்வாழ்வு நிலையம்

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காக இ.ம.உ.ஆ உடன் கூட்டுழைத்து பணியாற்றுவதற்கு இ.ம.உ.ஆஇன் சாதகத்தன்மைகளைக் கலந்துரையாடுவதற்கு சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பணியாற்றும் ஒரு அரசசார்பற்ற நிறுவனமாகிய குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் 29.04.2014 மற்றும் 03.10.2014 அன்று இடம்பெற்ற தொழில்நுட்ப மதியுரைக்குழு கூட்டத்தில் செயலாளர் பங்குபற்றினார்.

### மாற்றுக்கொள்கைக்கான நிலையம்

மாற்றுக்கொள்கைக்கான நிலையமானது கொழும்பில் பலாத்காரமாக ஆட்களை வெளியேற்றல் என்ற அறிக்கை ஒன்றில் பங்குபற்றுவதற்காக இ.ம.உ.ஆ க்கு அழைப்பு விடுத்திருந்தது. "அழகுபடுத்தலின் அழகற்றவிலை" அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. 09 மே 2014 அன்று இ.ம.உ.ஆஇன் செயலாளர் பங்குபற்றியிருந்தார்.

### Transparency International

1305.2015 இல் "ஓய்வூதியம் அடுத்தது என்ன" என Transparency International ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக்கலந்துரையாடலில் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

### இலங்கை மருத்துவ சங்கம்

உத்தேச புதிய தேசிய மருத்துவ மருந்து உபாயங்கள் மற்றும் ஒப்பனைப்பொருள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டமூலமான கருத்தரங்கில் ஆணைக்குழு பங்குபற்றியிருந்தது. இந்தச் சட்ட மூலமானது பேராசிரியர் சேனக்க பிபிலேயின் மருந்துக்கொள்கைகளினை அடிப்படையாகக் கொண்டு அவரது கொள்கைகளை அமுல்படுத்துவதை வசதிப்படுத்தும் முகமாக வரையப்பட்டு இருந்தது.

இக் கருத்தரங்கானது இலங்கை மருத்துவ சங்கம் மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து சொல்லப்பட்ட சட்டமூலம் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் இணைப்புடைய சம்பந்தப்பட்ட தரப்புகளிடமும் இருந்து சமனிலையான கருத்துக்களுக்கு அழைப்பு விடுப்பு நோக்கத்துடனும் 06.06.2014 இல் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்து.

### இலங்கை தேசிய சமாதான பேரவை

ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மீளிணக்கத்திற்கான உரிமை எனும் இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு திரட்டு நூலின் வெளியீட்டு விழாவில் ஒழுங்கமைப்பாளர்களின் அழைப்பின் பேரில் 10.06.2014 கலந்து கொண்டனர். இ.ம.உ.ஆ நூலகத்திற்கு அவர்களால் ஒரு நூற்பிரதியும் பங்களிப்பு செய்யப்பட்டது.

### வாழ்வுக்கான உரிமைகள்

ஆணைக்குழுவானது வாழ்வுக்கான உரிமைகள் நிலையத்துடன் 18.08.2014 அன்று அவர்களது வேண்டுகோளின் பேரில் அவர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தியது. கலந்துரையாடலானது தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துவதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபங்கு மீது கவனம் செலுத்தியது.

ஆணைக்குழுவானது "Police minimize force is what" என்பது தொடர்பான மக்கள் நியாயசபையாகிய வாழ்வுக்கான உரிமைகள் மனித உரிமைகள் நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சமூகம் மற்றும் மதத்திற்கான நிலையத்தில் 07.08.2014 அன்று இடம் பெற்ற நிகழ்வில் அவர்களது அழைப்பின் பேரில் பற்றியிருந்தனர்.

### செவிப்புலன் அற்றோருக்கான இலங்கை மத்திய சம்மேளனம்

செவிப்புலனற்றோரின் உரிமைகளின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்வதற்கு 15.08.2014 அன்று செவிப்புலனற்றோர் இலங்கை மத்திய சமாச பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டத்தை ஆணைக்குழு நடாத்தியது.

ஆணைக்குழுவானது சமூகசேவைகள் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியதுடன் அமைச்சானது நிகழ்ச்சித்திட்டத்திற்காக உரிய உத்தியோகத்தர்களை இனம் காணுவதற்காக சொல்லப்பட்ட நிறுவனத்தின் பிரதிநிதிகளை ஆற்றுப்படுத்தியது. நிகழ்ச்சித்திட்டமானது செவிப்புலனற்றோருக்கான மத்திய சமாசம் மற்றும் அமைச்சால் கூட்டாக வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது. ஆணைக்குழுவிடம் இருந்தான வளவாளர்கள் 18.12.2014 அன்று நிகழ்ச்சிதிட்டத்திற்கு பங்களிப்பு செய்திருந்தனர்.

### UNFPA

03.09.2014 மற்றும் 30.10.2014 இன்று ருசே்யு ஆல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு மற்றும் காப்புக்கான காரணிகளைப் புரிந்துகொள்ளுதல் எனப்படும் பாலியல் தொழில் மற்றும் வன்முறை மீதான ஆய்வுகளின் காண்புகளுக்கு உள்ளீடுகளை வழங்கும் தேசிய வேலைக்குழு கூட்டத்தில் இ.ம.உ.ஆ இன் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

### UNDP

இலங்கையில் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் மீதான கலந்துரையாடலில் இருந்து கொள்கைத்திட்டமிடலுக்கு எனப்படும் ஒரு வட்டமேசைக் கலந்துரையாடலில் இ.ம.உ.ஆ உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். இது சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு FOKUS Women and UNDP என்பவற்றினால் தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு மற்றும் சமூகசேவைகள் அமைச்சு என்பவற்றினால் 30.10.2014 அன்று ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

### சிவில் சமூகக் கூட்டம்

மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காக சிவில் சமூகத்துடனான ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் பலப்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கைளை UN Paris கொள்கைளுடன் உடன்படும் விதமாக இ.ம.உ.ஆ எடுத்தது.

2014 ஆம் ஆண்டுக்கான முதலாவது கூட்டமானது தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் நிமித்தமாக தாமதப்படுத்தப்பட்டதுடன், அது 2014 செப்ரெம்பர் 11 ஆம் திகதி இ.ம.உ.ஆகேட்போர்கூடத்தில் 28 சிவில் சமூக உறுப்பினர்களின் பங்குபற்றுகையுடன் இடம்பெற்றது. இக்கூட்டமானது இ.ம.உ.ஆ ஆணையாளர் ஜெசிமா இஸ்மாயிலின்

தலைமையில் இ.ம.உ.ஆ இன் சிரேஷ்ட பணியாட்தொகுதியினரின் பங்குபற்றுகையுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பரந்துபட்ட வீச்சில் மிகவும் தந்திரோபாயமான மட்டத்தில் சிவில் சமூக நிறுவனங்களுடன் பணியாற்றுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. இதன் நிமித்தம் இந்த செயற்குழுவானது இ.ம.உ.ஆ க்கும் சிவில் சமூக நிறுவனங்களுக்கும் இடையில் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக இருக்கும்.

முதலாவது குழுக் கூட்டமானது 16.10.2014 அன்று இடம்பெற்றதுடன் கவனக்குவிப்பு விடயங்களை இனம் கண்டது.

இறுதியாக ஐந்து செயற்பாட்டு மையங்கள் ஆகிய பின்வருவனற்றை உள்ளடக்கியவைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- வெளிப்பாட்டு மற்றும் ஒன்றுகூடும் உரிமை மீதான நிலைப்பாட்டு பத்திரம்
- சித்திரவதை சட்டத்தை தடுப்பதை மீளாய்வு செய்தல்
- பூசா தடுப்பு நிலையத்திற்கான கூட்டு விஜயம்
- தேர்தல் ஆணையாளருடனான கூட்டம்
- மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களைப் பாதுகாத்தல்

பின்தொடர்பு கூட்டமானது 25.11.2014 இல்இடம்பெற்றது

# அத்தியாயம் 07

## மனித உரிமைகளின் நிலை

நாட்டின் மனித உரிமைகள் பதிவுகளை பரிசீலிக்கும்பொழுது 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சில சம்பவங்களைப் பார்க்கும்பொழுது மகிழ்ச்சிகரமான சூழ்நிலைக்கு கொண்டு செல்லவில்லை. அச்சம்பவங்களானவை மனித நிலைமைகளை ஒரு பலவீன நிலைக்கு சென்றதே வெளிப்படுத்தி நிற்கிறது.

ஒரு ஆரோக்கியமான ஜனநாயக சனசமூகத்தில் மிக முக்கியமான அம்சமாக இருப்பது சட்டத்தின் மேலாண்மையாகும். சட்டத்தின் நீதியானதும் சமத்துவமானதும் வினைத்திறனானதும் சரியானதுமான அமுல்படுத்துகையே இதனை சாதிப்பதற்கு அவசியமானது. பல சம்பவங்களின் இடம்பெறுகையானது இதற்கு உரிய மரியாதை கொடுக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. ஒரு வெளிநாட்டுப் பெண்ணின் துஷ்பிரயோக சம்பவம் மற்றும் அவளது கணவன் ஒரு பிரதேசசபைத் தவிசாளர் உள்ளிட்ட குழுவினரால் கொலை செய்யப்பட்டது என்பது மீதான விசாரணைகள்இடம்பெற்றுள்ளதுடன் நடவடிக்கை தக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசியல் அதிகாரம் உடையவர்கள் தொடர்பாக சட்ட அமுலாக்கல் ஆனது மிகவும் பலவீனமாகவும் திருப்தியற்ற முறையிலும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் நடவடிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பதாக கணிசமான தாமதமும் ஏற்பட்டுள்ளது.

மத்தல விமானநிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பரிசோதனைக்காக சென்ற ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தடுக்கப்பட்டு தாக்கப்பட்டதுற்கு பொறுப்பாக இருந்தவர் தொடர்பாக சட்டம் அமுலாக்கப்படவில்லை. பொலிசாரும் அமைதியாக இருந்துள்ளனர். சில பௌத்த மத நிறுவனங்கள் சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொண்டு பலாத்காரமாக சில இடங்களை பரிசோதிக்கச் சென்றபொழுது உரிய நிறுவனங்களின் அதிகாரிகள் குற்றமிழைப்பவர்களைக் கைது செய்யாமல் சட்டத்திற்கான உரிய மரியாதையை உறுதிப்படுத்துவதற்கு தவறியுள்ளனர். இயற்கையாக சட்டத்தின் மீதுள்ள நம்பிக்கை சிதைவுற்றது. இந்த நிலைமைகளின் உச்சமாக அளுத்தகம பேருவளைப் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஒழுங்கு செய்யப்பட்ட படைகளினால் தாக்கப்பட்டு சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு படையினர் விசேடமாக பொலிசார் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் செய்யத் தவறியுள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. உரிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அகற்றப்பட்டுள்ளபொழுதிலும் இது போதியதானதோ நிரந்தரமான தீர்வு அல்ல. சேதமடைந்த கட்டிடங்கள் வீடுகள் மீளக்கட்டப்பட்டாலும் உடைந்த இதயங்களைத் ஒருங்கிணைப்பதற்கான படிநிலைகள் இவைகளல்ல. சம்பவமும் சட்டம் அமுல்படுத்தப்பட்டவிதமும் நம்பிக்கையீனத்திற்கு இட்டுச் சென்றுள்ளதுடன், இனங்களுக்கிடையிலான தூரத்தை அகலித்துள்ளன. அவர்களின் பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

பாடசாலைக்கு விஜயம் செய்து ஆசிரியரை முழந்தாளிடச் செய்த ஒரு மாகாணசபை உறுப்பினருக்கு எதிராக சட்டம் அமுலாக்கப்பட்டதானது பொதுமக்களின் அழுத்தத்தின் நிமித்தமே அவ்வாறு செய்யப்பட்டது. பின்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் தண்டனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டத்தை பாதுகாப்பதற்கு பொறுப்பு ஒப்புவிக்கப்பட்ட பொலிசார் அதனை துஷ்பிரயோகம் செய்வது அவதானிக்கப்பட்டது. சந்தேகமான குற்றவாளிகள் அல்லது பாதாள உலக கோஷ்டியினர் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்கள் குற்றம்சாட்டப்பட்ட விசாரணைகளுக்காக எடுத்துச் செல்லப்பட வேண்டியபொழுது அவர்கள் கொலைசெய்யப்பட்டமைக்கான உதாரணங்கள் இருந்தன. பல தடவைகளில் பொலிசார் மேலதிக விசாரணைகளுக்கு எடுத்துச் செல்லப்படும்பொழுது இவர்கள் சந்தேகத்திற்குரிய குற்றவாளிகள் பொலிசாரிடம் இருந்து தப்ப முயற்சித்ததாகவும், பொலிசாரைத் தாக்க முற்பட்டதாகவும் சுயபாதுகாப்பு மற்றும் இவ்வாறான போராட்டத்தில் சந்தேக நபர்கள் கொலை செய்யப்பட்டதாகவும் பொலிசார் சொல்லியிருந்தனர். இந்தவிதமான சம்பவங்களானவை இவைகள் உண்மையான சம்பவங்களாக அல்லது நாடகம் போடப்பட்டவைகளாக என மக்களின் மனங்களில் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு தடைகளும் இடம்பெறுபவைகளில் தேவையற்ற செல்லவாக்குகளும் காணப்பட்டபொழுதிலும் அவற்றுக்கு பொறுப்பான ஆட்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. சட்டத்திற்குப் பதிலாக ஒழுங்கு செய்யப்பட்ட படைகள் முன் வந்ததுடன் பிரசைகளால் சட்டத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையானது மீண்டும் சேதப்படுத்தப்பட்டது. அப் பாதிக்கப்பட்ட தரப்பினர் விளைவுகளை மௌனமாகத் தாங்கிக் கொண்டனர். சட்டத்தின் மேலாண்மைக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலை இந்த உண்மைகள் ஏற்படுத்திய காலப்பகுதியாக இது இருந்தது.

### மீளிணக்கம்

இனங்களிடையேயும் வேறுபட்ட மத நம்பிக்கையுடையோரிடையேயும் மீளிணக்கத்தை வளர்ப்பதற்கு சமத்துவக் கொள்கையின் பிரகாரம் செயற்படுவது அவசியமானது. நியாயமான வேண்டுகோள்கள்களையும் அவற்றுக்கு செவிமடுப்பதற்குமான ஒரு தயார்நிலையும் விருப்பமும் இருக்க வேண்டியதாக உள்ளது. பிரச்சினைகள் இருக்குமாயின் விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் ஊடாக அவற்றுக்கான தீர்வுகளுக்குச் செல்ல வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு செல்லாதுவிடின் சிறுபான்மையினருக்கும் வேறுபட்ட மத நம்பிக்கை உடையவர்களுக்கும் பாதுகாப்பு உள்ளது என்ற வாக்குறுதி பலவீனப்படுகிறது.

இவ்வாறான நிலைமைகளின் விளைவுதான் வடமாகாணசபையானது யுத்த காலத்தின்பொழுது இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவும் அவைகள் எவ்வாறு எடுத்தாளப்படுகிறது என்பது தொடர்பாகவும் சர்வதேச விசாரணை ஒன்றுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள நிலைமையாகும்.

வடக்கில் அபிவிருத்திகளும் உட்கட்டமைப்பு வசதிகளும் இடம்பெற்றபோதிலும் மனித அபிவிருத்தியானது மெதுவாகவே உள்ளது. யுத்தத்தின்பொழுது பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனாலும் அறிக்கையிடப்பட்டவைகள் தீர்த்து வைக்கப்படவில்லை.

- ஒரு சிவில் ஆளுநரை நியமிக்கும்படி பல வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. ஆனால் வேண்டுகோள் மதிக்கப்படவில்லை.

- காணிப்பிரச்சினை தொடர்பாக ஒரு உரிய மதிப்பீடு இல்லாதுள்ளது

யுத்த காலப்பகுதியின்பொழுது இராணுவ முகாம்கள் வதிவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட காணிகள் 2009 மேயில் யுத்தம் முடிவடைந்த பிற்பாடு பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபொழுதிலும் உரிமையாளர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இது நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயன்முறையையும் நம்பிக்கையையும் பாதித்துள்ளது. அதன் நிமித்தமாக ஜனநாயகத்திற்கும் நல்லாளுகைக்குமான ஒரு எதிர்மறையான பங்களிப்பை விளைவித்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடருவதற்கான தேவையுள்ளதா எனப் பரிசீலிப்பதற்கு படிநிலைகள் எடுக்க வேண்டிய தேவையுள்ளபொழுதிலும் அதனை அகற்றுவதற்கும் உரிய சட்ட முறைமைகளின் பிரகாரம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் இன்னும் தடுத்திருப்பவர்களை விடுவிப்பதற்குமான இந்த நடவடிக்கையானது தாமதப்பட்டுக்கொண்டு வருகிறது. இது குறித்து ஆணைக்குழு சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தபொழுதிலும் பொருத்தமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காகவும் நாட்டின் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் அவ்வாறான நடவடிக்கையொன்றின் தேவை குறித்தும் ஆணைக்குழு எடுத்துக்காட்டியுள்ளது.

### குற்றச்செயல்கள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம்

குற்றச்செயல்களின் வகையைக் காட்டிலும் வன்முறையின் பாரதூரம் அவற்றின் இயல்பை வெளிக்காட்டும் சம்பவங்கள் மற்றும் அவற்றின் பரவுகை அறிக்கையிடப்பட்டுள்ளன. சிறுவர்கள் மாத்திரம் அல்ல வயது வந்தவர்களும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர். இதன் விளைவாக சமூகத்திலே தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற பார்வையுள்ளது. அத்துடன் தாமதமின்றி மரணதண்டனை அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணமும் உள்ளது.

30 ஆண்டுக்கால நீடித்த யுத்தம் மற்றும் குற்றச்செயல் குறித்து மக்களின் கூருணர்வு பலவீனமடைந்ததின் விளைவாக இடம்பெற்ற சம்பவங்கள் ஆயுதங்களைப் பாவிப்பதில் பயிற்றப்பட்டு ஆயுதப்படைகளில் இருந்து விலகிய பல எண்ணிக்கையானோர் அவர்கள் வேலையில் இருந்து விடுபட்டு இருப்பதினால் சட்டத்திற்கு மாறான போதைப்பொருள் வியாபாரம் செய்யும் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து வருமானம் ஈட்டும் பிரதான வழியாக அதனை

மாற்றிக்கொண்டுள்ளார்கள் என ஆணைக்குழு காண்கிறது. இந்தக் காரணிகள் அனைத்தும் குற்ற கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அவற்றின் அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்துள்ளன.

## தேர்தல்களை நடத்துதல்

பொதுமக்களின் கருத்துக்களை நிச்சயப்படுத்தவதும் அவர்களது விருப்பத் தெரிவுகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்குவதும் முக்கியமானது. இந்த நோக்கத்திற்காகவே தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடத்தவது முக்கியமானது. கடந்தகாலத் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்தப்படவில்லையென்பதே ஆணைக்குழுவின் பார்வையாக உள்ளது.

ஜனாதிபதி தேர்தல்கள், பொதுத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள், பிரதேசசபைத் தேர்தல்கள் ஆகிய நிறுவனங்களுக்கு பல பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொருவரும் அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தேர்தலை ஒரே தடவையில் நடத்துவதற்குப் பதிலாக கட்டம் கட்டமாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டபொழுது மக்களின் விருப்பமானது சரியான முறையில் வெளிப்படுத்தப்பட்டது என எங்களால் முடிவுக்கு வர முடியாது. அவ்வண்ணமான சமயங்களில் அந்த அரசாங்கத்திற்கு இது குறித்து ஆணைக்குழுவானது அறிவித்தது. 2014 ஆம் ஆண்டிலும் மார்ச் மாதத்தில் தெற்கு மற்றும் மேற்கு மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்தப்பட்டன. ஜுலை மாகாணத்தில் ஊவா மாகாணசபைக்கான தேர்தல்கள் தீர்மானிக்கப்பட்டு இருந்தன. ஆணைக்குழுவானது தேர்தல் ஆணையாளருடன் இணைந்து இந்த தேர்தல்களானவை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடப்பதைக் கவனிப்பதற்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் சட்டத்துடன் ஒட்டியொழுகியும் நடுநிலைத்தன்மையுடன் தேர்தல் கடமைகளை நிறைவேற்ற அழைப்பு விடுத்தும் பெரும் முயற்சி செய்திருந்தது. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மூன்று மொழிகளிலும் வழிகாட்டுதல்களை வழங்குதல் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கூட்டங்களை நடத்துதல், அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் சட்டத்தின் எல்லைகளுக்குள்ளாக அவர்களுக்கு செயற்படும்படி அறிவித்தல், அல்லாதுபோனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி என விழிப்புணர்வை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் இதனை அடைவதற்காக பல படிநிலைகள் எடுக்கப்பட்டு இருந்தன. ஊவா மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பாக ஆணைக்குழுவால் மொனராகலையில் பொலிசாருக்கும் முக்கிய உத்தியோகத்தர்களுக்கும் அவதானிப்புக் குழுவினருக்கும் ஊடகத்தினருக்கும் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள்கள் மற்றும் அறிவு வழங்குதலானது அங்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு இயலச் செய்த நடவடிக்கையாக தேர்தல் ஆணையாளரால் அதிகம் புகழப்பட்டது. இதேவிதமான நடவடிக்கை திட்டமொன்று ஜனாதிபதி தேர்தலின்பொழுதும் எடுக்கப்பட்டது. பொலநறுவை, அனுராதபுரம், மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் எல்லா செயலாளர்களும் அழைக்கப்பட்டதுடன், பொலநறுவை, அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை கல்முனை பகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எல்லோரும் அழைக்கப்பட்டு தேர்தல் ஆணையாளரின் பங்குபற்றுகையுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

அதேவேளையில் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டதுடன் அவர்களது செயற்பாடுகள் குறித்து விசாரிக்கப்பட்டது. தேர்தல்சட்டங்கள் மீறப்படுவது குறித்து அறிக்கையிடப்பட்ட நிறுவனங்களில் அவர்களின்தலைவர்கள் அழைக்கப்படுவதுடன் பொதுச் சொத்துக்கள் பிழையாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், அரசியல்கட்சி செயற்பாடுகளுக்காக அரசாங்க உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கும் வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாறாக எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் தேர்தல் ஆணையாளராலும், தேர்தல் அவதானிப்பு நிறுவனங்களாலும் புகழப்பட்டது இங்கே குறிப்பிடப்பட வேண்டும். இந்த ஆணைக்குழுவின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு அலகின் பணிப்பாளர் செல்வி துஷித்த அமரசேகர ஊவா மாகாண தேர்தல் கடமையில் ஈடுபட்டுவிட்டு பதுளையில் இருந்து கொழும்புக்கு திரும்பிவரும் வழியில் கார் விபத்தொன்றில் மரணமடைந்தார். அவரின் பாராட்டு நிறைந்த சேவை செயற்பாடானது இங்கே குறிப்பிடத்தக்க மிகவும் கவலை நிறைந்த சம்பவமாகும்.

## ஜெனிவாத் தீர்மானம்

அடுத்த வருடம் மார்ச் இல் இலங்கையானது ஜெனிவாவில் தீர்மானம் ஒன்றினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலைமை தொடர்பாக அரசாங்கத்திற்கு பல பொறுப்புக்கள் உள்ளன என ஆணைக்குழு குறிப்பிட்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சொல்லப்பட்ட சிபார்சுகளை அமுல்படுத்துதல், காணாமற் செய்யப்பட்ட ஆட்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரிவுபடுத்தல் மற்றும் பலப்படுத்துதல், பாதுகாப்பு நோக்கங்களுக்காக வடக்கில் பயன்படுத்தப்பட்ட

Meeting with Secretary General, Commonwealth Secretariat



Meeting with Commissioner of Elections



Meeting with Inspector General of Police





Meeting with Civil Society Members




Launching of the Report on Elders Rights



Launching of the Report on Death Penalty






## Celebration of Human Rights Day -2014








## ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාවේ ප්‍රාදේශීය / උප / ජංගම කාර්යාල

## இ.ம.ஆ இன் பிராந்திய / உப நடமாடும் /அலுவலகங்கள்

## HRCSL's Regional/ Sub / Mobile Offices




| ප්‍රාදේශීය කාර්යාල | ලිපිනය | දුරකථන අංකය |
|---|---|---|
| මහනුවර. | 8/1, ප්‍රිම්රෝස් පටුමග, පේරාදෙනිය පාර, මහනුවර. | 081-2228009 |
| මාතර | 15, කාලිදාස පාර, මාතර. | 041-2226533 |
| මඩකලපුව. | 24, සින්න උප්පොඩෙ පාර, මඩකලපුව. | 065-2224420 |
| අනුරාධපුරය. | 623/20 ඊ , ප්‍රීමන් පාර, අනුරාධපුරය. | 025-2234801 |
| ත්‍රිකුණාමලය. | 343, බලාගාර පාර, ත්‍රිකුණාමලය. | 026-2222607 |
| වව්නියාව. | 26/2, පිට රවුම් පාර, වව්නියාව. | 024-2222029 |
| බදුල්ල. | 19/1,බී බදුලුපිටිය පාර, බදුල්ල. | 055-2223020 |
| අම්පාර | 4, වන සැතපුම් කණුව, උහන පාර කරන්ගාව අම්පාර | 063-2222340 |
| කල්මුණේ. | 161/1, මහ වීදිය, කල්මුණේ. | 067-2229728 |
| යාපනය. | 1,3 වෙනි හරස් වීදිය, යාපනය. | 021-2222021 |

| பிராந்தி காரியாலயம் | முகவரி | தொலைபேசி இல |
|---|---|---|
| கண்டி | 8/1 றிம்ரோஸ் வீதி, கண்டி | 081 – 2228009 |
| மாத்தறை | 15, காளிதாச வீதி, மாத்தறை | 041 – 2226533 |
| மட்டக்களப்பு | 24, சின்னஉப்போடை வீதி, மட்டக்களப்பு | 065 – 2224420 |
| அனுராதபுரம் | 623/20E , பிறீமன் வீதி, அனுராதபுரம் | 025 – 2234801 |
| திருகோணமலை | 343,மின்சார நிலைய வீதி, திருகோணமலை | 026 – 2222607 |
| வவுனியா | 26/2, வெளிவட்ட வீதி, வவுனியா | 024 – 2222029 |
| பதுளை | 19/1 B, துலபிட்டிய வீதி, பதுளை | 055 – 2223030 |
| அம்பாரை | 4ம் மைல் கல், உஹண வீதி, ஹெறன்காவ, அம்பாரை | 063 - 2222340 |
| கல்முனை | 161/1, பிரதான வீதி, கல்முனை | 067 – 2229728 |
| யாழ்ப்பாணம் | 1 ,3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் | 021 – 2222021 |

காணிகள் தொடர்பாக செய்யப்பட வேண்டிய ஒரு மதிப்பீடு மற்றும் மீள் பரிசீலிப்பு மீள்குடியேற்றப்பட்டோர் தொடர்பாக செய்யப்பட வேண்டிய ஒரு பின்விசாரணை, பயங்கரவாத தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டியமை, வடக்கில் சிவில் நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய படிநிலைகள் என்பன செய்யப்படக்கூடியவைகளும் செய்யப்பட வேண்டியவைகளும் என்ற கருத்தை ஆணைக்குழு கொண்டுள்ளது.

ஆணைக்குழுவின் அவதானிப்பில் 2014 ஆம் ஆண்டானது அரசியல் பிரிவுகளுக்கும் அரசியல் மறுசீரமைப்புகளுக்கும் இட்டுச் சென்ற ஒரு ஆண்டாகும்.

**Human Rights Commission of Sri Lanka.**

No.165, Kynsey Road, Colombo - 08.
Hot Line : 1996
Tele : +94 - 11 2694925, 2685980,2685981
Fax : +94 11 2694924
sechrc@sltnet.lk www.hrcsl.lk